II

TAMIL

திருமணம் - செல்வக்கேசவராய முதலியார், எம்.ஏ.

TAMIL

AN ESSAY

BY

T. CHELVAKESAVAROYA MUDALIAR, M.A.,

Pachaiyappa's College.

New Impression.

MADRAS:

DIOCESAN PRESS, VEPERY.

1929

PREFACE

A SERIES of articles on Tamil, about fifteen in number, was contributed by me to the *Swadesamitran*, in the early nineties of the last century. A digest of these articles was subsequently read by me before the Tamil Society of the Madras Christian College, the late Rao Bahadur C. W. Damodaram Pillai, B.A., B.L., presiding. To the digest I added some traits of the Tamils and called it 'Tamil and the Tamils.' This was published in the *Manoharan* in 1896.

I have now re-arranged, and, in many places, rewritten the above, giving an account in the end of the habits and customs of the Tamils of the pre-historic age, as far as can be gleaned from Tolkappiam as well as the classics of the age of the Last Academy of Madura, with a view to give some idea to the college student about the then state of civilization of the Dravidas. In the absence of any history of Tamil Language and Literature, the Essay must naturally be imperfect, and felt unsatisfactory by literary connoisseurs. Nevertheless I would feel amply recompensed for my work, if it should only arouse some interest in our college students in the study of our dear old classics.

PERAMBORE,
1st January 1906.

T. C.

தமிழ்.

முதற் பாகம்–தமிழ் மொழி.

1. திராவிட பாஷா சமூகம்.—

"எமிரா வோரி யென்பாள் எந்துண்டி வஸ்தி யென்பாள்
தாமிராச் சொன்ன தெல்லாந் தலைகடை தெரிந்த தில்லை
போமிராச் சூழுஞ் சோலை பொருங்கொண்டைதிம்மி கையில்
நாமிராப் பட்ட பாடு நமன்கையிற் பாடு தானே"

என்றனர் ஒரு கவிராயர். சத்திரத் திருட்டில் "காதுரா" என்ற தமிழனை நோக்கி "நாதிரா" என்று வாதுசெய்த தெலுங்கன் கதையும், "ஈ மூட அட்ட உண்ணி" என்ற தெலுங்கனை நோக்கி, "ஈயாம், மூடாம், அட்டையாம், உண்ணியாம், இத்தனையும் பிடித்துவந்து இங்கே வைத்தான். பையலைச் சாட்டையால் வளாசு" என்ற தென்னாட்டுத் தமிழன் கதையும் நம்மிற் பலரறிவோம். "வடுகன் தமிழறியான், வைக்கோலைக் கசு வென்பான்" என்பது தமிழில் பழமொழியாய் இராநின்றது. "தெனுகு தேட, அரவம் அத்வானம்" என்பது தெலுங்கரில் முதுமொழியாய் இராநின்றது. தெலுங்கு படித்தால் நாக்குத் திரும்பும்; தெலுங்கு படித்தால் தமிழ் தானே வரும் எனும் பித்துச் சில கிழங்களின் தலையை விட்டு இன்னும் இறங்கவில்லை. மலையாள தேயமோ சிலகால முன்னர் வரையில் மந்திரம் வல்ல தேயமாகவே எண்ணப்பட்டிருந்தது. மலையாளிகளுடைய

உச்சிக் குடுமியைக் கண்டால் முதியவர்களும் சிறுநகை செய்யாமல் இருப்பதில்லை. எவனாகிலும் வாய்குளறிப் பேசினால், என்னடா கன்னடம் பேசுகிறாய் எனக் கைகொட்டி நகையாடுகிறோம். தமிழரும் தெலுங்கரும் மலையாளிகளும் கன்னடியரும் ஆகிய நால்வரும் புகைத்தேரிலே ஒருங்கு செல்ல நேர்ந்தால், ஒருவர் சொல்வதை ஒருவர் அறிவதில்லை; குறிப்புவகையாக மூங்கைப் பாஷையாற்றான் ஒருவரோடொருவர் சொல்லாடுவர். ஆயினும், இந்நால்வருடைய மூதாதையரனைவரும் தொல்லைநாளில் ஓரிடத்திலே வதிந்த ஏககூட்டத்தினர் எனக் கூறினால், சிலர் "இதுவும் ஒரு கலிகாலக் கூத்து" என நகுதல் செய்வர்: இவ்வார்த்தை கூறும் நாமும் பித்தர் எனப்படுவோம். எனினும் ஈதுண்மை' என்பது பாஷாதத்துவம் உணர்ந்த பலர்க்கும் அங்கைக் கனியாமன்றோ. இக்கூட்டத்தினர் திராவிடர் என்னுங் குறியீடு பெறுவாராயினர். இவர்களுடைய பாஷைகளும் திராவிடம் என்னும் பிண்டப்பெயர் பெறுவனவாயின. தொல்லைநாள் தொட்டுப் பெற்றுள்ள தலைமையால் தமிழொன்றனையும் சிறப்புவகையால் திராவிடம் என்றே தம்முள் வழங்குவாராயினர் வடமொழிவாணர்.* திராவிடம் என்பது வடமொழியில் ஓடி வளைந்தது என்னும் பொருளுடையதாம். ஆகவே, மேற்கூறிப் போந்தவர்கள் சென்று வளைந்து குடியேறியிருந்த தென்னாட்டினை வடமொழியாளர் திராவிட தேசம் என்றும், அவர்களைத் திராவிடர் என்றும், அவர்களுடைய பாஷையைத் திராவிடம் என்றும் தம்முள் வழங்கலாயினர் என்பது வெளிப்படை.

---

* [Malayalam had not formed into a separate dialect at this period, and only one language, Tamil, was spoken from the Eastern to the Western Sea. *The Tamils 1800 Years Ago*.]

I.

2. **தமிழ் என்பது திராவிடம் என்பதன் மரூஉவா?**— இனித் திராவிடம் என்னும் ஆரியமொழியே தமிழ் என மரீஇயது என்பார் கூற்றும் பலர்க்கும் உடன்பாடாவதில்லை. த்ராவிடம்—த்ரவிடம்—த்ரமிடம்—த்ரமிளம்—தமிளம்—தமிழ் என மரூஉவின் முறைகாட்டி மயக்கஞ் செய்கின்றவர்களை நோக்கி, "அற்றன்று: தமிழ் என்பதை உச்சரிக்க இயலாத ஆரியர்கள், தமிள்—தமிளம்—த்ரமிளம்—த்ரமிடம்—த்ரவிடம்—த்ராவிடம் எனத் தம்மில் மரூஉவகை செய்வாராயினர்" என வாதுக் கழைப்பர். தமிழ் எனுந் தமிழ்மொழி,

"குழலினு நண்மொழி வேயினுங் குறிநாம் பெறிவுற்
றெழுவு தண்டமிழ் யாழினு மினியசொற் கிளியே."

"மீனுங் கொடியும் விரிதிரை யைந்துந்
தேனுறை தமிழுந் திருவுறை கூடலு
மணத்தலின் மதிக்குல மன்னவ னாகியும்"

என்றாற்போன்ற இலக்கியங்களில், இனிமை என்னும் பொருட்டாய் இயங்காநிற்பவும், திராவிடம் என்னும் சொல்லினைத் தமிழோடு சம்பந்தமுடையதாய் மொழிவது, "மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடு" வதேயாம். திராவிடம் என்பது வடநூல்களுள்ளும் பண்டைப் பனுவல்களில் காண்கிலாததோர் நவமொழியென்றே நன்குணர்ந்த புலவர்கள் சாதியாநிற்ப, வடமொழி வாடை வீசுமுன்னரே பன்னெடுங்காலமாய் இங்கு நிலைபெற்றிருந்த தமிழைத் திராவிடம் என்பதன் திரிவென்பது மலடி பெற்ற மகவினை ஒக்கும்.

3. **தமிழ் என்கிற வார்த்தையின் உற்பத்தி.**—ஓதற் கண் செவிக்கின்பம் மனக்கின்பம் பயக்கின்ற இந்தப் பாஷைக்கு, இனிமை எனப் பொருள்படும் தமிழ் எனுந் தமிழ்மொழியே காரண விடுகுறியாக வழங்கலாயிற்

றென்பர் சிலர். தென் என்பது அழகு என்னும் பொரு ளில் வழங்குவதைக்கொண்டு, தென்மொழி என்பது தெம்மொழி—தெமொழி—தமிழ் என மருவி வழங்குவத யிற்று என்பர் சிலர். சென்னைத் துரைத்தன கலாசாலை யில் வடமொழிப் புலமை நடாத்திய ஆப்பர்ட் (Gustav Opert) என்பவர், இந்திய நாட்டில் முற்காலத்து மள் ளா எனப்படுவார் ஒரு கூட்டத்தினர்; அவர்கள் பாஷை மள்ளம் என்பது; அது திரு என்னும் அடைகொண்டு திருமள்ளம் என்பதாக, அதனடியில் திரமிளம்—தமிழ்—திராவிடம் என்பன பிறந்தன என்பர். இன்னோரன்ன கற்பிதக் குறியீடுகள் நாடு முற்றும் பரந்துசென்று வழங்கலாவது மிக வரிதாகலின், இம்முத்திறவர் கூற்றும் பொருந்தாது. இனித் தென்னாட்டில் வழங்கு மொழி தென்மொழி; அது தமிழ் எனத் திரிந்தது என்றால் அமையாதோ என்பார் கூற்றும் வலியுடைத்தன்று. வடக்கண் வழங்கு மொழியைத் தென்னாட்டினர் வட மொழியென்றும், வடபால் வாழ்வோர் தமிழைத் தங்கள் பாஷையில் தென்மொழி எனப் பொருள்படுகின்ற ஒரு சொல்லினைக் கொண்டும் வழங்கலாம். இவ்விருவரும் விரவிநின்ற விடத்தும் இவ்விருமொழியையும் தம்முள் பகுத்துணருமாறு அக்குறியீடுகளானே வழங்குவர். தென்னாட்டினர் தாமே தமது மொழியைத் தென்மொழி என வழங்குவர் என்பது பொருந்தாது. ஆகவே அது தமிழ் எனத் திரிந்ததென்பது இல்லை.

4. தமிழ் என்பது தோன்றுதோட்ட வழக்குடையது.— ஆசிரியர் அகத்தியனாரும் அவர்க்கு முதன் மாணாக்க ராகும் தொல்காப்பியர் முதலாயினாரும், இலக்கண வாராய்ச்சி செய்யத் தொடங்குமுன்னரே, தொன்று தொட்டே தமிழ் என்னும் மொழியானது மரபுமொழி யாக வழங்கியதின்றேல், ஆசிரிய மரபையே மரபாக்

கொள்ளும் இம்மாண்மரபினர், "தமிழென் கிளவியு மதனோரற்றே" என்றும், "வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" என்றும், "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்" என்றும், "செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி" என்றும் இங்ஙனம் அதனை எடுத்தாளத் துணிதல் செய்வரோ? ஆகவே இங்கு வடமொழி வாடை வீசுமுன்னரே தமிழ் என்னும் கிளவி வழக்காறுடையதாக இருந்தது என்பது போதரும். இப்பெயர் பிறந்த காரணத்தை அறிவது இப்போது எளிதான காரியமன்று, இது மிகவும் புராதனமான விஷயமாதலின். திராவிடர்களுடைய புராதனத்தை நோக்குங்கால், ஆரியருடைய புராதனமானது க்ஷண நேரத்துக்கு முன் பெற்ற ரூட்டர் தந்தி செய்தியை ஒக்கும் என, மாஜி சென்னைக் கவர்னர் கிராண்ட் டப் அவர்கள் பரீக்ஷாபட்ட மளிக்கும் பிரசங்கத்தில் கூறினது, இன்னும் அனேகருடைய நினைவிலிருக்கலாம். பாஷைகளின் சம்பந்தா சம்பந்தங்களை ஆராய்கின்ற ஆசிரியர்களே இதற்கு ஒரு வழி காட்டி முடிவு காட்டத்தக்கவர்கள். தமிழர்களுடைய புராதன சரித்திரத்தை ஆராயப் புகுகின்றவர்கள் இதனைக் கண்டறிவதில் கண்ணுங் கருத்துமாக இருத்தற்பாலர். இந்த உண்மை எப்படியும் ஒருகாலத்தில் வெளிவரக்கூடும்.*

---

* [Most of these Mongolian tribes emigrated to Southern India from Tamalitti, the great emporium of trade at the mouth of the Ganges, and this accounts for the name "Tamils" by which they were collectively known among the more ancient inhabitants of the Dekhan. The name Tamil appears to be therefore only an abbreviation of the word Tamilittis. The Tamralipta are alluded to, along with the Kosalas and Odras, as inhabitants of Bengal and the adjoining sea-coast in the Vayu and Vishnu Puranas. — *The Tamils 1800 Years Ago.*

The Pali form of the Sanscrit Tamralipti is Tamalitti. It is now known as Tamluk, and lies on a bay of the Rupnarayan River, 12 miles above its junction with the Hugli mouth of the Ganges, 35 miles S. W. of Calcutta.--*McCrindle's Ptolemy.*]

5. தமிழ்க்கு வடமொழியே தாய்ப்பாஷை என்பார் காட்டும் பிரமாணங்கள்.—தமிழ்தான் ஆரியத்தின் வழிவந்ததன்றித் தன்னிற்றானுயதோர் தனிமொழியன்று என ஒருசார் புலவர்கள் தமிழ் நூல்களினின்றே பிரமாணங் காட்டுகின்றனர்.

"அன்றியும் தமிழ்நூற் களவிலை. அவற்றுள்
ஒன்றே யாயினுந் தனித்தமிழ் உண்டோ?
அன்றியும் ஐந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவே நாணுவர் அறிவுடை யோரே.
ஆகையால் யானும் அதுவே யறிக.
வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினும்
இலக்கண மொன்றே என்றே யெண்ணுக"

என்கிற இலக்கணக்கொத்தைக் காட்டினால் நான் அலக்கணுறுவேன்.

"தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்"

என்றகத்தியனைக் கூறும் இராமாயண அடியை ஓத எனக்கு நா எழுவதில்லை.

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற் குரவர்"

என்னும் விருத்தத்தின் ஏனையடிகளைக் கேட்க நான் ஆற்றகில்லேன்.

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்தக்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்"

என்பதைக் கண்டால் அம்மட்டிலே நான் அந்தப் புராணத்தை மூடிவிடுவேன்.

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ."

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
உண்ட பாலனை யழைத்தது மென்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்ற திருவிளையாடலைப் படிப்பதுதான் எனக்குப் பெருவிளையாடல். நாலாயிரப் பிரபந்தத்தில்

"செந்திறத்த தமிழோசை வடசொல் லாகி"

என்ப தொன்றுமே எனக்குப் பேரானந்தத்தை விளைப்பது.

"வினைக்குறிப்புப் பெயரெல்லாம் தத்திதன்"

என்னும் பிரயோக விவேகத்தைக் காட்டினால் அப்பிரயோக விவேகவுரையை மறுப்பேன். இது கிடக்க.

II.

6. **பாஷைகளின் பாகுபாட்டில் தமிழ்க்குரிய வகுப்பு.**—பன்னாட்டு மொழிகளையும் ஓதியோதிச் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றிற் கொன்றோடொன்றுள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் அறிந்து, பாஷா தத்துவங்களை நிர்ணயித்த புலவர்கள் (Comparative Philologists), உலகில் வழங்காநின்ற பாஷைகளை ஆரியம்—செமிடிக்—துரானியம் என மூன்றாகப் பாகுபடுத்தியிருக்கின்றனர். அவற்றுள் ஆரியமானது, சமஸ்கிருதம்—கிரீக்—லாடின் முதலியன அடங்கப் பெற்றிருப்பதாம். செமிடிக்காவது, ஆரமெயிக்—ஹீப்ரு—அரபி என்னும் பிரிவினை உடையது. துரானியமாகின்றது, மங்கோலியம்—துருக்கி—பின்னியம்—தமிழ்—போதியம்—மலேயம் முதலியன சேர்ந்ததாகும். ஆகவே தமிழ் துரானிய வமிசத்தைச் சேர்ந்ததென்பது தெளிவு. தமிழின் சிதைவே தெலுங்கும் கன்னடமும் மலையாளமும் என்றுங் கூறுகின்றனர்.

7. திராவிடர் எங்குநின்றும் இந்தியாவில் குடியேறினோர்?—திராவிடம் என்னப்பட்ட பாஷைகள் இந்தியாவின் தென்பாரிசத்தில் மாத்திரமே வழங்கிவருதலால், அவற்றை வழங்கிய முதற்குடிகள் தங்களுக்கு முதலில் உறைவிடமாகிய ஆசியாவின் மத்தியப் பிரதேசங்களிலிருந்து ஆரியருக்கு முன்னமே இந்தியாவில் குடியேறி நிலைபெற்றவர்களென்று சரிதவாசிரியர்கள் தலைக்கட்டியிருக்கின்றனர். பசிபிக் மகாசமுத்திரத்தில் ஆஸ்திராலியா முதலிய தீவுகளில் வசிக்கின்ற பழைய குடிகள் வழங்கிவருகின்ற பாஷையில், அனேக சொற்கள் தமிழேயாகவும் பற்பல சொற்கள் தமிழோடொத்தனவாகவும் இருத்தலின், அத்திவாந்தரவாசிகளும் திராவிடர்கள் என்னப்பட்டவர்களும் நெடுங்கால முன்னர் ஓரிடத்தில் ஒன்றாக வசித்தவர்கள் என்பதும், ஆகவே இவர்கட்குத் தாயகமாக இருந்தது ஆசிய மத்தியப் பிரதேசமே என்பதும் எளிதில் துணியப்படும். ஆஸ்திராலிய திராவிட பாஷைகளில் உள்ள இலக்கண வொற்றுமையை ஙாரிஸ் என்னும் அங்கிலேயர் முதலில் கண்டெழுதினார் என ஒரு நூலில் குறித்திருப்பதும் இதனை வலியுறுத்துகின்றது. இந்தியாவில் வடக்கிலேயுள்ள இராஜ மஹாலின் (Rajmahal) மலைப்பிரதேசங்களில் வழங்கும் பாஷையானது தமிழோடு ஒப்புமை உள்ளதாகவும், இமயமலைச்சாரலிலும் திபெத்திலும் வழங்கும் பாஷை ழகரப்பிரயோகம் உள்ளதாகவும் இருத்தலால், திராவிடர்கள் ஆசிய மத்தியப் பிரதேசங்களிலிருந்து இமயமலையின் வடமேற்கு வடகிழக்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவிற் பிரவேசித்துக் குடியேறினவர்கள் என்பது விளக்கமாகின்றது. நிகழ் காலத்தில் இந்தியாவின் வடக்கிலே வழங்கிவருகின்ற பாஷைகளில் அனேகம் பெரும்பான்மையாக ஆரியத்

தின் சிதைவாகவே இருத்தலால், திராவிடர்கள் ஆரியருக்குப் பலகால முன்னரே இந்தியாவில் குடியேறித் தெற்கிற் சென்று சேர்ந்தவர்கள் என்பதும் உறுதிப்படுகின்றது. உடற்கூற்று வண்ணத்தால் திராவிடர்கள் மங்கோலிய பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது எத்ஞலஜி என்னும் மானுட விகற்ப நூலாசிரியர்கள் துணிந்தபடியாகலின், தமிழ் துரானியத்தின்பாற் பட்டதென்பதே துணிவு.

8. தமிழும் அகத்தியரும்.—இதனை இன்னும் விரித்துரைக்க நிமித்தம் இல்லை. தமிழானது வடமொழிக்குத் தலைமகனென்றும், தமிழரும் ஆரியருடைய நாற்பாற் குலத்திற் கீழ்ப்பாற் குலத்தரென்றும், காரணங் காட்டாது கண்மூடிக் கழறுகின்றவர்களுடைய கோட்பாடுகளை வெட்டிப் பேசும் பொருட்டே இம்மாத்திரமுங் கூறினோம். இனி அகத்தியர் தமிழைத் தாமே படைத்தன ரென்னுங் கூற்றை ஆராய்வோம். சமஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டு பாஷைக்கும் முதலாசிரியர் சிவபெருமான்: சிவபெருமான் சமஸ்கிருதத்துக்கு இலக்கணநூல் பாணினி முனிவருக்கும், தமிழுக்கு இலக்கணநூல் அகத்திய முனிவருக்கும் அருளிச்செய்தார்: அம்முனிவர்கள் இருவரும் முறையே அம்முதனூல்கள் இரண்டின் வழியாகப் பாணினியம் அகத்தியம் என்னு நூல்களை அருளிச்செய்தார்கள் என்பர் சிலர். சிவபெருமான் ஒரு டமரகத்தை ஒலிப்பிக்க அதன் வலப்பக்கத் தெழுந்த ஓசையை முதலாகக்கொண்டு இலக்கணத்தைச் சூத்திரித்தார் பாணினிபகவான்: இடப்பக்கத் தெழுந்த ஓசையை முதலாகக் கொண்டு தமிழிலக்கணத்தை அருளிச்செய்தார் அகத்தியனார் எனவும் புகல்வர் சில புலவர். அற்றன்று, சிவபெருமானுடைய திருக்கலி

யாணை மகோற்சவகாலத்தில் பூமண்டலம் நிலைகுலைந்த தாக, அதனுல் மேலெழுந்த தென்பாலைச் சமன்செய்ய வந்த அகத்தியர், வழியில் தமிழினை அறுமுகக் கடவுள் அருளப்பெற்றனர் என்ப வேறு சிலர். ஈதெல்லாம் புராணகற்பிதம்; காசிமடத்திலிருந்த வடநூல் வலவ ரோடு மாறுகொண்ட அகத்தியர், "நான் தென்பா லடைந்து தமிழில் மேம்பட்டு உங்கள் இறுமாப்பை அடக்கி இறும்பூதெய்துவேன், காண்டிர்" எனச் சபதங் கூறிவந்தவர், தமிழைச் சில சான்ரேர்களிடங் கற்று, பாண்டியன் உதவியால் தலைச்சங்கத்தை நிறுவுதல் செய்து, தமிழை வளர்ப்பாராயினுர்: இதுதான் உண்மை என்பர் மற்றும் சிலர்.

9. **அகத்தியர் செய்த காரியம்.**—அகத்தியர், ஏதோ ஒரு காரணத்தால் தென்னுட்டினை அடைந்தவர், தமிழ் வல்ல சான்றினரிடத்து அதனை ஓதி யுணர்ந்தார் என் பதே எமக்குத் துணிவு. தமிழை அகத்தியர் தாமே படைத்தார் என்பது எவ்வாற்ருனும் பொருந்தாது. ஒரு பாஷையை ஒருவர் உண்டாக்கினர் என்பது பாஷாதத்துவசாத்திர முடிவுக்கு முற்று முரண்பாடா கும். கடவுட்டன்மையை ஒருவற்கேற்றி, அவன் தானுக வே ஒரு பாஷையைச் சிருட்டித்து இலக்கியங்களையும் உண்டாக்கி, அவற்றிற்கு இலக்கண நூலையும் வரையறு த்து, அதனைப் பலரும் பயிலச் செய்தான் என்பது பிரகுர்தி விரோதமான அசம்பாவிதமே யாகும்.

"இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பல்"

பன்னுட்டினு முள்ள பாவலர்க்கும் நாவலர்க்கும் உடன் பாடா யிருப்ப, அகத்தியர் தாமே இலக்கியங் கற்பித்து இலக்கணமும் இயற்றினுர் என்பது பொருந்துமா?

அகத்தியர் காலத்துக்கு முன்னரே தமிழில் இலக்கியங்கள் இல்லாவிட்டால்,

"இலக்கிய மின்றி இலக்கண மின்றே.
எள்ளின் றுகில் எண்ணெயு மின்றே.
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்"

எனப் பேரகத்தியங் கூறியதாகக் கூறுவ தென்னும்? அகத்தியர் தென்னாடடைவதற்கு முன்னரே அங்கே தமிழ் வழங்கியிருந்த தென்பதும், அந்நாளில் அதனை வழங்கினோர் அநாரியரான வேறு மனித ரென்பதும், இராமாயணத்தில் அகத்தியர் இராமருக்குக் கூறிய தட்சிண வரலாற்றிலும் ஸ்காந்த புராணத்திலும் பெறப்படும். இயலும் இசையும் நாடகமுமான இலக்கியச் செறிவையுடையதாய்ச் செவ்விதான இலக்கண வரையறை யில்லாமற் கிடந்த தமிழை அவ்வரையறைப் படுத்திய பெருமை அகத்தியர்க் குரியது. வடநூல் வல்லவராதலின் அப்போக்கைப் பின்பற்றி, தமிழின் இலக்கணங்களை ஆராய்ந்தறிந்து, இய லிசை நாடகமென்னு மூன்றுறுப் படங்கிய பிண்டமாகப் பேரகத்தியம் என்னு மிலக்கண நூலை அருளிச்செய்தனர் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

"ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறெண விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையான்
இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்"

என்னும் அகத்தியமே நமது கூற்றுக் கியைந்த சான்று. குருவியின் தலையிலே பனங்காயை வைப்பது போல்,

குறுமுனிவர் தலையிலே எடுக்கமாட்டாத சுமையை எடுத்து வைத்துவிட்டனர், தமிழ்ப் புலவரும் வடமொழி வாணரும். இவர் தலையிலே ஏற்றியிருப்பது தமிழ்ச் சிருட்டி மாத்திரமே யன்று: உடுக்கை தட்டிப்பாடும் பாடல்களையெல்லாம் புகழேந்தியின் தலையிலே கட்டிவிட் டதுபோல, இம்முனிவர் தலையிலே மருத்துவ நூற்சுமை யையும் சோதிடப் பொதியையும் ஞானசாத்திரக் கட் டையும் ஏகமாய்க் கட்டி எடுத்துத் தூக்கிவிட்டார்கள். அகத்தியரே காலகதியால் இப்போது கண்திறந்து கொண்டு, பூர்வ ஜன்ம வுணர்ச்சியடைந்து, அவர் பெய ரால் வழங்கும் நூல்களையும் தம்மைத் தமிழ்படைத்த அயனென்று முறையிடும் புராணங்களையும் பார்ப்பாரா யின், "இதென்ன கொள்ளை! இதென்ன கொள்ளை!" என்றே விலாப்புறம் புடைபட நகுதல் செய்வாரென்றே நம்புகின்றோம்.

III.

10. தமிழில் வழங்கும் திசைச்சொற்களும் வடசொற் களும்.—தமிழானது மிக்க சொல்வலிமையும் வடமொ ழிக்கு முற்றும் புறம்பான இலக்கியவகையும் இலக்கண வமைதியும் உடைய தனிமொழியே. தமிழில் வழங்கு கின்ற மொழிகள் முப்பால. அவை தமிழ் மொழிகளும் திசைமொழிகளும் வடமொழிகளுமாம். இவற்றுள் தமிழ்மொழிகளாவன, வேற்று சில மக்கள் வழங்கு மொழிகளின் அடியாகப் பிறவாதனவாய்த் தமிழ்க்கே உரியனவாக இருப்பன. திசைமொழிகளாவன, தமிழ் நீங்கலான வேறு பாஷைகளில் நின்றும் தமிழில் வந்த டைந்து அருகி வழங்கிவருவன. வடமொழிகளாவன, ஆரியத்தில் ஒரு பிரிவான சமஸ்கிருத பாஷையிலிருந்து தற்சமமாகவும் தற்பவமாகவும் தமிழ்க்கண் வழங்கலா

யின. இவை தம்முள் திசைச்சொற்கள், இத்தனையென ஒருவாறு கணக்கிடலாவனவாய்ச் சிறிதளவாகவே இருக்கின்றன. அவை தாமும் வாணிபத்தின் பொருட்டாகத் தமிழரும் பிறரும் விரவியவிடத்துத் தமிழிற் புகுவனவாயின. துருக்கர் அரசாட்சியிலும் தற்காலம் ஆங்கிலேய அரசாட்சியிலும் வந்தேறிகளாய் வழங்கும் திசைச்சொற்களும் பலவுள. உலகவழக்கில் இவை அதிகமாயினும், தமிழ்நூல் வழக்கில் வருவன விரல்விட்டெண்ணக் கூடியவைகளே. கிராம்பு—சன்னல்—சாவி—அலமாரி—பாதிரி முதலியன போர்த்துகேசியம். ஜமீன்—சிபாரிசு—சிப்பந்தி—சர்பரா—சிபாய்—சுமார்—தஸ்தாவேஜு—பக்கிரி—பந்தோபஸ்து—மாசர்நாமா—மேஜை—ரஸ்தா என்றாற்போல்வன பாரசீகம். அலாக்கு—அஜமத்து—ஆசாமி—இரிசால்—இலாகா—கஜானா—கசாலா—கபாபு—கமாமிசு—காடிகானா—காய்தா—சிம்டா—ஜப்தி—நகல்—நாசூக்—மாமூல்—முனிசிப்—சாவகாரி—வசூல் என்பன போன்றன அரேபியம். அசல்—அந்தஸ்து—அபின்—அலுவா—அம்பாரி—அர்க்கார்—ஆஜர்—இஸ்திரி—உஷார்—கலாயி—கிச்சடி—குமஸ்தா—குல்லா—கார்கானா—கோட்டா—செக்குபந்தி—ஜமுக்காளம்—சாலக்—ஜாபிதா—ஜமிக்கி—ஜல்தி—ஜோடு—சோதா—சால்வை—தபால்—டாணா—தர்பார்—துப்பட்டா—நபர்—பஞ்சா—பஞ்சாயத்—பத்தாய்—பக்கா—பங்களா—பசந்த்—பைசல்—மாகாணம்—மோரா—ருஜு—லட்டு—தொப்பி—பாரா—மாசூல்—ஜவாப்—சவாரி—சபாஷ்—ஜவான்—பஸ்தி—மசாலை முதலியன இந்துஸ்தானி. நூல் வழக்கான திசைச்சொற்களைத் தொல்காப்பியம் நன்னூல் முதலியவற்றின் உரையிற் காட்டிய உதாரணங்களாற் றெளிந்துகொள்க. வடசொற்கள் இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் தக்ஷணப் பிரதேசங்களில் தமிழர்களிடையே குடியேறின பிறகு நூல்வழக்கிலும் உலகவழக்கிலும் வழங்கலாயின சொற்

கள். இவை பெரும்பான்மையாய்ச் சமயங்களையும் சமயாசாரங்களையும் சாஸ்திரங்களையும் தத்துவ ஆராய்ச்சிகளையும் சில தொழிற்றுறைகளையும் குறித்த சொற்களாம். கடைச்சங்கத்திலே சமணர்களும் சைவர்களும் வைணவர்களும் பலவருணத்தவரும் சங்கப்புலவர்களாய் விளங்கி யிருந்தனரென்பது அக்காலத்து நூல்களால் நன்கு தெளியப்படும். சமணரும் பௌத்தரும் பரவிப் பல நூல்களை இயற்றிய காலத்திலும் பல வடசொற்கள் வந்தேறிகளாக வழங்கலாயின. இங்ஙனம் வழங்கும் வடசொற்களின் தொகுதியும், தமிழிற்கே உரிய சொற்களின் தொகுதியோடு ஒப்பிட்டுக் காணுமிடத்தில், மிகச் சிறிதே யாகின்றது. நிகண்டுகளில், தெய்வப் பெயர்த் தொகுதியும் மக்கட்பெயர்த் தொகுதியில் ஒரு கூறும் நீங்கலாக, ஏனைத் தொகுதிகளில் வடமொழிகள் அருகியிருப்பதே இதற்குச் சான்று.

11. நூல்வழக்கில் வடமொழிப் பிரயோகத்தின் அளவு.—நூல்வழக்கில் ஏறியிருக்கும் வடசொற்களை ஒருவாறு கணக்கிட்டுப் பார்ப்போம். இடைச்சொற்கள் தமிழே யாதலின் அவற்றை நீக்கியே கணக்கிடுவோம். அங்ஙனங் கணக்கிட்டவிடத்தும், ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி முதலான நீதிநூல்களில் வருகின்ற ஈராயிரத்திருபது சொற்களில் வடசொல்லாவன சற்றேறக்குறைய நூற்றைம்பத்தாறு. இது நூற்றுக்கு எட்டு வீதமுமாக வில்லை. நறுந்தொகையில் அறுநூறு சொற்களில் இருபானான்கு வடசொற்கள் அமைந்துள்ளன. இது நூற்றுக்கு நான்கே ஆகின்றது. நைடதம் வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்ட நூலாயினும், அதனுள் சராசரியில் மூன்று பாட்டில் இரண்டு வடசொல்லின் மிகுவது அருமை. திரிகடுகத்தில் இருபத்தைந்து வடசொற்கள் உள்ளன. இது நான்கு வெண்பாவுக்கு



பிஷப் சால்ட்வெல்

ஒரு வடசொல் ஆகின்றது. நான்மணிக்கடிகை முற்றும் தடவிப்பார்த்த விடத்தில் இருபது வடசொல் கண்டோம். திருக்குறளில் ஒரோவோ ரதிகாரத் திரண்டும், ஒவ்வொன்றில் ஒன்றுதானும் காண்பது அரிதாய் இராநின்றது. நாலடியில் ஐந்து வெண்பாவில் ஒரு வடசொல் காண்பது கஷ்டமாக இருந்தது. கலித்தொகையில் கலிப்பாட் டொவ்வொன்றிலும் வடசொல் ஒன்றின் மிக்கிலது. கல்லாடத்தில் அகவல் ஒன்றில் ஐந்தின்மிக்க வடசொல் இல்லை. பத்துப்பாட்டைப் பதமுறச் சுவைத்த விடத்து, பற்பனூறும் சிற்சினூறுமாய வரிகள்கொண்ட பாட்டு ஒவ்வொன்றிலும் வடசொற்கள் நான்கைந்தின் மிகவில்லை. அவைதாமும் வடசொல்லோ தமிழ்ச் சொல்லேயோ என ஐயங்கோடற் கேதுவாய் இராநின்றன. சைவ வைணவ சமயநூல்களாகும் திருவாசகம் தேவாரம் நாலாயிரப் பிரபந்தம் முதலியவற்றில் மேலே காட்டின அளவினும் வடசொற்கள் மிக்குள்ளன. இன்னும் சோதிட முதலியவற்றை நோக்குமிடத்து (பரிபாஷையான) வடசொற்கள் பின்னும் பலவாம். ஈதெல்லாம் செப்பஞ் செய்து ஒப்பிட்டுப் பார்த்து, காலகதியைப் பின்முன்னாகக் கொண்டு இலக்கியங்களில் வடமொழிப் பிரயோகத்தைக் கணக்கிடுகையில், பின்னே போகப்போக இலக்கியங்களில் அம்மொழிப் பிரயோகம் குறைந்துகொண்டே போகின்றது என்பதும், அதனால் தன்னுலியன்ற தனித்தமிழ் ஓர் காலத்து உளதாயிருந்தது என்பதும் பட்டம்பகலாகத் திட்டப்படுகின்றது. ஆகவே அகத்தியனார் இங்கு அடியிடு முன்னர்த் தாயைய தனித்தமிழ்மொழி உண்டென்பது துணிவு.

12. **வடமொழிச் சார்பின்றியே தமிழ் தனித்தியங்க வல்லது.**—கிறிஸ்திய மதப் பாதிரியாகிய கால்ட்வெல்

என்னும் அத்தியட்சர், திராவிடபாஷா தர்மம் * என்னும் நூலில், "தற்கால நிலைமையில் தெலுங்கானது தன்னகத்துக் குடிகொண்ட வடசொற்களை ஒழிப்பது கஷ்டசாத்தியமான காரியம்; கன்னடம் இதுசெய்ய முயல்வது தெலுங்கினுங் காட்டில் அமையாத காரியம்; இது செய்வது இவ்விரண்டினுங் காட்டில் மலையாளத்தில் முற்றும் நடவாத காரியம். இம்மூன்று பாஷைகளும் வடமொழியின் வலிவையே வெகுவாய்க் கொண்டு இன்னும் அதன் சார்பே சார்பாக நிற்பனவாம். வேற்றுச் சார்பின்றியே வெகுவாய்ச் சீர்செயப்பெற் றுயர்ந்த தமிழ் ஒன்றுமே, வேண்டுமானல், தன்னிடங்கொண்ட வடசொற்கள் அனைத்தையுமே அகற்றிவிட்டுத் தனித்து நின்றியலும் ஆற்றலுடைத்தாய் இருப்பது மாத்திரமேயன்றி, வடமொழி யின்றியே மேம்பா டடையத் தக்கதாகவும் இராநின்றது" என்றுரைத்துப் போந்தார். இவ்வாசிரியர்க்கும் தமிழர்க்கும் பற்றுசாவது ஒன்றும் இல்லை. தமிழைச் சிறப்பித்தலால் இவர் பெறலாகும் ஆதாய விரயமும் ஒன்றும் இல்லை. ஐரோப்பிய பாஷைகளிலும் இவர் மூன்று நான்கு அறிந்தவர்; சமஸ்கிருதமும் பயின்றவராகக் காண்கின்றனர்; தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் ஆகிய நான்கு பாஷைகளையும் நன்கு ஆராய்ந்தவர். ஆதலின் இவர் ஒரு தலைச்சார்பாக ஒன்றனை உயர்த்திக் கூறவேண்டிய காரண மில்லை. பின்னுஞ் சில ஐரோப்பியரும், தமிழானது சொற்பொரு

* [It is true it would now be difficult for Telugu to dispense with its Sanskrit : more so for Canarese ; and most of all for Malayalam :—these languages having borrowed from Sanskrit so largely, and being so habituated to look up to it for help, that it would be scarcely possible for them now to assert their independence. Tamil, however, the most highly cultivated *ab intra* of all Dravidian idioms, can dispense with its Sanskrit altogether, if need be, and not only stand alone but flourish without its aid.]

ஏழுகில் கிரீக் லாட்டின் பாஷைகளுக்கு எவ்விதத்திலும் இளைக்காத பாஷையென்றே இயம்பியிருக்கின்றனர்.

13. உலகவழக்கில் தமிழ்மொழிகளின் மிகுதி.—இதன் திறம் இன்னும் விரிக்க விரிக்க விரியும். நாம் பலபடப் பாரிக்கவேண்டா. இன்றளவும் உள்ள தமிழை மேனோக் காகக் காண்கும், வம்மின். உழவும் கலப்பையும் காருங் கயிறும் குண்டையும் நுகமும் சாலும் வயலும் வாய்க் காலும் ஏரியும் மடுவும் ஏற்றமும் பிறவும், பயிரும் களையும் நட்டலும் கட்டலும் முதலாய ஏரெழுபதும், தமிழ்மொழிகளான் இயன்றனவே. தமிழர்கள் வதித ரும் வீடுகளின் கூறுகளாகிய தலைக்கடையும் புழைக் கடையும் கூரையும் வாரையும் கூடமும் மாடமும் தூக் கும் தூணும் கல்லும் கதவும் திண்ணையும் குறடும் தரை யுஞ் சுவரும் மண்ணும் மரனும் மற்றவுந் தமிழே. தலை யுங் காலும் கண்ணுங் காதும் மூக்கும் மூஞ்சியும் வயி றும் மார்பும் நகமும் சதையும் நாவும் வாயும் பல்லும் மயிரும் மற்றவும் ஆகிய உடற்கூற்று மொழிகள் தானுனை தனித்தமிழன்றே. தமிழ் நாட்டிலுள்ள சிற்றூர் சீறூர் ஆரூர் பேரூர் புத்தூர் புற்றூர் செய்ஞ்ஞலூர் மணலி நெல்லூர் நெல்லை கொன்றூர் குறட்டூர் என்னும் ஊர்கள் பலப்பல தமிழ்மொழியே புனைந்தன. ஞாயிறும் திங் களும் செவ்வாயும் வியாழமும் வெள்ளியும் ஆகின்ற கிழமைகட்குத் தமிழ்ப் பெயரே பெயர். தொண்ணூற் றொன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பது வரையில் எண்ணப்பட்ட எண்களில் ஒன்றே னும் வடமொழியால் எண்ணப்படுவதில்லை. ஆழாக்கு உழக்கு நாழி குறுணி பதக்கு தூணி கலன் என்னும் முகத் தலளவையும், சாண் அடி முழம் என்னும் நீட்டலளவை யும் பலம் வீசை மணங்கு என்னும் எடுத்தலளவையும்

இன்னும் கீழ்வாயிலக்கமும் மேல்வாயிலக்கமும் அவற்றின் குறியீடுகளும் எல்லாம் தமிழே. தமிழர்கள் உண்ணும் சோறும் சாறும் காயும் கறியும் பாலும் பழமும் நெய்யும் தயிரும் உப்புமுதலொன்பதும் பருப்புமுதல் பத்தும் தமிழ்ச்சுவையே உடையனவாய்த் தமிழ் மணமே வீசுகின்றன. தமிழர்கள் செவிக்கொள்ளும் உணவான எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் அணியும் ஆகிய எடுஞ் சுவடியும் எடுத்துப் பார்க்குமிடமெல்லாம் தமிழாகவே இருக்கின்றன. இவர்களுடைய துணியும் அணியும் தமிழே இவர்கள் தொழும் கடவுளும் தமிழ் மயமே. தமிழர்களுடைய வீடும் நாடும் காடும் மேடும் எங்கும் புகுந்து பார்த்த விடமெல்லாம் தமிழ் தமிழாகவே இருக்கின்றன.

14. திசை வடசொற்கள் விரவி வருதலால் தமிழ்க்குளதாகும் நன்மை.—தான் பிறிதுமொழி விழையாமல் தன்னாற்றலே ஆற்றலாக நடந்தேற வல்லதாயின், தமிழ் ஏனை வடதிசைச் சொற்களை முற்றுங் களைந்துவிட்டுக் காரியம் நடத்தலாகாதோ? தமிழ் தனித்தியங்கும் வலிமையுடைத்தென வாளா கூறிக்கொள்வதனாற் பயனென்னை? நன்று. தமிழ்மொழி வல்ல நாவலரும் பாவலரும் இங்ஙனே செய்ய விரும்பினால், இது செய்யக் கூடாத காரியமன்று. இது செய்யக்கூடுமாயினும், இதனை ஒருதலையாக்கொண்டு செய்வது தகுதியன்று என்பது நாம் அறிந்தபடி. ஆன்பா லுண்பான், கனியாக, கண்டசருக்கரையாக, தேனாக, அதனுடன் கலந்துண்டலை வேண்டா என்மர் உளரோ? அவ்வான்பால் தானும், தன்னளவில் மதுரம் மிக்க தேனும், கனி முதலியவற்றால் தனது இன்சுவை குன்றுத லுடைத்தாமோ? அடையும் காயும் சுண்ணமும் விரவமென்றவிடத்து அம்

மூன்றினும் பிறிதாய சுவையும் நிறமும் தோன்று மன்றே. அங்ஙனமே தமிழும் திசை வடசொற்களும் தனித்தனியாக நின்றுழித்தோன்றும் ஆற்றலையும் ஓசை யின்பத்தையும் காட்டில், அவை தம்முள் விரவநின்ற விடத்துத் தோன்றும் ஆற்றலும் ஓசையின்பமும் மிகச் சிறந்தனவேயாம்: பாகமும் செவ்விதாக இருக்கும். அறுசுவையுண்டி அடுவார் அதற்குரிய உபகரணங்களின் அளவும் நிறையும் அறிந்து சேர்த்து அட்டவிடத்து, அவ்வுண்டி உரமுஞ் சுவையுந் தருதல்போல, தமிழ் நூல் யாப்பவரும் திசை வடசொற்களை இயையும் இட னும் அளவும் அறிந்து வழங்குவராயின், அவர் வாக்கு, வளமும் இன்பமும் தருவதாகும்: பாகமும் செம்பாக மாக இருக்கும். இந்நுட்பமறியாது முற்றும் தமிழை யாயினும், பலபட வடதிசைச் சொற்களையாயினும் வழங் கினல், அந்நூலின் நடையானது சிலாபாகமென்று சிறப் பிழக்கும். நீலமும் மரகதமும் பவழமும் முதலியன இடையிடை விராயமுத்துவடமே கண்ணினுக் கின்பந் தருவதல்லது, முற்றும் முத்தாஞய முத்துமாலை அவ் வின்பந் தருவதில்லையே. ஆகவே இடையிடையே வட திசைச்சொற்கள் கலந்துவருவது தமிழ்க்கு இனிமைமே லினிமையும் பெருமைமேற் பெருமையுந் தொடுப்பதா கின்றது. ஆயினும் அது செய்யுமிடத்தில், சித்திரகாரி யானவன் தான் உருப்படுத்தும் உருவின்மீது பல வன் னங்களை வாரியிறைக்காமல், அவ்வவ்வுறுப்பின் நலனும் ஒளியும் உய்த்தறிந்து, அவ்வதற்கியையச் சூக்குமமாக வும் தூலமாகவும் தூரியக்கோலால் வன்னந் தீட்டுவது போல, நூலாசிரியனும் தனது யாப்பில் இடனறிந்து வடதிசைச் சொற்களைச் சுருக்கியும் பெருக்கியும் வழங் கற்பாலன். இங்ஙனம் திசை வடசொற்களும் அவை குறிக்கும் கருத்துக்களும் ஏறிவருமாயின், தமிழின்

போக்கும் தமிழருடைய கருத்தின் போக்கும் உரம் பெற்றுவரும். ஆங்கிலேயருடைய பாஷையும் அவர்களுடைய கருத்தின் போக்கும் நாட்குநாள் மேம்பட்டு வருவதற்குக் காரணம், பலதேய சொற்களும் பலதேய நூல்களின் சாரமும் அவர்களுடைய பாஷையில் ஏறி வருவதேயாம். வேற்றுப்புல மொழிகள் விரவாமலும், வேறு தேயநூல்களின் கருத்துக்களை அமைத்துக்கொள்ளாமலும், உள்ளதை உள்ளபடி வைத்திருக்கின்ற பாஷையானது, உண்ணவும் நண்ணவும் உடலை மண்ணவும் உதவாதபடி ஏரிகுளங்களில் கட்டிவைத்திருக்கின்ற நிலைநீருக்குச் சமானமாகும். காலகதிக்கேற்பத் தன் வழியே போகவிடுகின்ற பாஷையானது, ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் யாற்று நீருக்குச் சமானமாகும். நிலைநீர் நாட்குநாள் ஒளிமழுங்கி நன்மை கெடுவது: யாற்று நீரோ தெளிவும் வளமும் பெருகி நன்மைதருவதாகும். ஆகவே ஒரு பாஷையை அதன் போக்கிலே போகவிட்டால், அது நாட்குநாள் வளம்பெருகி மேம்படும் என்பதில் ஐயமில்லை. ஒரு பரம்பரையில் பல வேறு குடிகள் கூடிக் கலப்பதனால், அதன் கோத்திரப்பெயர் குடிப்பெயர் நீங்கிவிடுமா? பல வேறு பாஷா சம்பந்தம் உண்டாவதனால், ஒரு பாஷையின் தொன்மையும் தலைமையும் போய்விடுவதில்லை. பல வேறு குடிகளில் கொள்வதுங் கொடுப்பதுஞ் செய்வதால் தங்கள் பரம்பரை தூய்மையிழக்கின்றதென்று அஞ்சுகின்றவர்கள், நாட்குநாள் க்ஷீணித்து மந்தகதி அடைவதல்லது முன்னிலும் வளமிகுவதில்லை. வேறு பாஷா சம்பந்தம் பெறாமல் தனித்தியங்கும் பாஷையும் அங்ஙனமே க்ஷீணமடைந்து வளம் குன்றுவதாகும்.

15. **தமிழ்ச் சொற்களின் உத்தேசத் தொகை.**—இங்ஙனம் திசை வடசொற்களோடு இனிது வழங்கும் தமிழில்

உள்ள சொற்கள் எத்தனை? இக்கடாவினை இத்தனை எனக் கூறி விடுப்பது அரிது. இவ்வருமை தமிழினிடத்தின் மாத்திரமே உள்ளதொன்றன்று. எந்தப் பாஷையிலும் இத்தனை சொற்கள்தான் உள்ளன என இதுகாறும் உறுதியிட்டு அறுதி கூறினாரில்லை. கடலில் இத்தனை கரிசை நீர் உள்ளதென்று அளந்துகொள்ளமுடியுமா? கடலில் ஒருசார் ஆற்றுநீரும் ஒருசார் ஊற்றுநீரும் ஒருசார் வேற்றுநீரும் இடைவீடின்றிப் பாய்ந்துகொண்டே இருக்கின்றன. கடனீரும் ஒருசார் சுவறியும் ஒருசார் கரைகடந்தும் ஒருசார் ஆவியாகப் பரிணமித்தும் இடைவீடின்றி வற்றி அளவு குறைந்துகொண்டே இருக்கின்றது. இங்ஙனம் பாயாநிற்பவும் கழியாநிற்பவும் எஞ்சிநிற்கும் அளவே கடனீரின் அளவாகும். இதனை உத்தேச மாத்திரத்தான் ஊகிப்பதன்றி, உதுகாண் கடனீரினளவு எனக்காட்ட இயலாது. ஒரு பாஷையில் வழங்கும் மொழிகளின் தொகுதியும் அது போலும் என்க. அதனை இத்துணை எனத் திட்டமாக உரைத்தல் இயலாது. ஒருசார் திசை வடசொற்கள் புதியன புகுதலாகப் புகுதவும், ஒருசார் அவை பழையன கழிதலாகக் கழியவும், எஞ்சி நின்றவைகளே இத்துணை என ஒருவாறு ஊகித்தறியலாம். ஆயினும் இத்தனையென அறுதியிடலாகாது. கழிகின்ற சொற்கள் இன்ன ஆண்டில் இன்ன திங்களில் இன்ன கிழமையில் கழிகின்றோம் எனப் பலரும் அறியக் கழிவதில்லை. வெள்ளியானும் தங்கத்தானும் செம்பினானும் இயன்றனவாய் ஒரு நாட்டில் வழங்கும் காசுகளானவை கைக்குக் கை மாறுநிற்கையில், இன்னநாளில் கழிதலாகின்றன என்பதோர் உறுதியின்றி, தம்மீது பொறித்துள்ள அரச முத்திரையானது சிறிது சிறிதாய் முகந்தேய்ந்து செல்லாத காசுகள் ஆகிவிடுமாறுபோலே, சொற்களும்

வழக்காற்றில் பண்டித பாமரர்களிடத்துச் செல்லாதன வாகிக் கழிவுறுகின்றன. பழைய நூல்களின் உரைகளில் சிற்சில சொற்களை உரையாசிரியர்கள், "இவை அக்காலத்து வழங்கின; இக்காலத்து வழக்கிறந்தன" என்றெடுத்துக் காட்டியிருப்பதே இதற்குச் சான்று. இளமைப் பருவத்தில் கேட்ட எத்தனை சொற்கள் முதுமைப் பருவத்தில் கேட்கப்பெறுவது கார்த்திகைப் பிறையாக இருப்பது எத்தனை பேர்க்கு அனுபவசித்தம்? இதுபோக, இளமையில் கேட்டிராத எத்தனை சொற்களை முதுமையில் புதுவதாகக் கேட்கப் பெறுகின்றோம். நிகண்டுகளில் காணாத பல சொற்கள் ஒரு தலைமுறையளவில் புதுப் புத்தகங்களிலும் ஏறிவிடுகின்றன. ஆகவே ஒரு பாஷையில் உள்ள சொற்களை இத்துணை என்று எண்ணிக்காட்டுதல் அரிதேயாகும். ஜன சங்கியை எடுப்பதில் உள்ள வருத்தத்தினும் இதன்கண்ணுள்ள வருத்தம் மிகப்பெரிது. செய்யுள் வழக்கிற்கே உரிய திரிசொற்களை வகுத்துக் காட்டிய நிகண்டுகளையே அநுசரித்து வகைப்படுத்த சதுரகராதியில் உள்ள சொற்கள் பன்னீராயிரத்து நூற்றிருபத்தைந்து. பின் ராட்லர் (Rottler) என்பவர் பதித்த அகராதியில் பின்னும் பல சொற்கள் உண்டு. அதன்பின் அகராதி அச்சிட்ட வின்ஸ்லோ (Winslow) என்னும் பாதிரியார் அதனைக் காட்டில் முப்பதினாயிரம் சொற்களை அதிகமாகக் காட்டியிருக்கின்றார். ஆகவே தமிழ்நாட்டில் இருவகை வழக்கையும் எடுத்துச் செவ்விதாக ஆராய்வோமாயின், இயற்றிரி தமிழ்ச் சொற்களும் வடதிசைச் சொற்களும் சேர்ந்து இலட்சத்துக்குக் குறையா என்பது பெறப்படும்.

IV.

16. **வடமொழியைத் தழுவாத தமிழ்நூல்கள் உண்டா?**— இனி இப்பாலேய் தமிழின் தொன்மையை யுணராதவர்

களில் வடமொழி வலவர் சிலர் "என்ன ஐயா, தமிழ் தமிழ் எனப் பெருமலைவு செய்யாநின்றீர்? உங்கட்கு வடமொழியைத் தழுவாத இலக்கியங்கள் உண்டா? பாரகாவியங்கள் உண்டா? நாடகம் சங்கீதம் உண்டா? தார்க்கம் வேதாந்த முதலான சாஸ்திரங்கள் உண்டா? உங்கள் தமிழைக் கட்டிவையுங்கள். எல்லாம் நாங்கள் சப்பி உமிழ்ந்த சக்கை தானே" எனக் கூறிப் பெருமிதமெய்துகின்றனர். இவ்வடமொழி வலவரோ டெதிர்த்தட்டாக நிற்பது தமிழ்ப் புலவர்கட்குச் சிங்க சொப்பனம்போலும். கடபடாமென்று அவர்கள் உருட்டுதலைக் கேட்டமாத்திரத்தில் இவர்கள் நடுங்கிவிடுகின்றனர். முன்னிட்டகாலைப் பின்வாங்காமல், நாமாயினும் அன்னோர் கூறுகின்றதனை வெட்டிப் பேசப்புகுந்து, இயன்றன கூறிக் காண்போம்.

17. அவ் வினாவை விடுப்பதற்குரிய ஆராய்ச்சி வகை.—முதலிடைச் சங்கமிருந்த மதுரையுங் கபாடபுரமும் கடல் கொள்ளப்பட்ட ஞான்று, வழிவழிப் பெயருமாள, அந்தோ வாரணம் வாரிக்கொண்ட எரணமுருவம் யோகம் இசைகணக் கிரதஞ்சாலம்—தாரண மறமே சந்தம் தம்பநீர் நிலமுலோக—மாரணம் பொருளென்றின்ன மானநூல் யாவும் போக; மகம்மதிய மன்னர் தீக்கடவுளை எவித்தீத்த பனுவல்கள் பலவுங் கழிய; இராமபாணங்கள் துளைத்துச் செல்லரித்த பண்டைநூல்கள் பலவும் ஒழிய; இருந்த இடனுந் தெரியாது உக்குதல் மக்குதலான கிரந்தங்கள் பலவும் நீங்க; இந்நாள்காறும் எஞ்சி நின்றனவற்றை ஒருசார் உசாவுவோம். இவற்றுள், வடமொழி நின்றும் அதர்ப்படயாத்தலாய் மொழிபெயர்க்கப்பட்டன எவை? கருத்துமாத்திரத்தான் தழுவப்பட்டு யாத்தன யா? வடநூற்போக்கினையே போக்

காகக் கொண்டு நடப்பன யாவை? வடநூற்பொருளை இடையிடையே விரவக்கொண்டன என்ன? இவ்வினாக் களை விடுத்தல்வேண்டும். விடுத்தபின்னர் எஞ்சி நிற் பன எவையேனும் உளவோ என்னும் வினா எழும். அவ் வினாவினை விடுப்பதே இங்கு நாம் அடியிட்டுக்கொண்ட கருமம். அதனை விடுக்காவிடின் இதுவரையிற் கூறின வெல்லாம் நின்றுவற்றும்.

18. தமிழில் மொழிபெயர்ப்பு நூல்கள்.—மொழிபெயர்த் ததர்ப்பட யாத்தலுக்கு இலக்கணவிளக்க முடையார் ஆசாரக்கோவை திருவள்ளுவப்பயன் என்பவற்றைக் காட்டினர். ஆசாரக்கோவை அதுவே யென்பது

"ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையா னாசாரம்
யாரு மறிவ தறமாக மற்றவற்றை
ஆசாரக் கோவை யெனத்தொகுத்தான்"

என்னும் அந்நூலின் சிறப்புப்பாயிரத்தால் துணியப் படும். திருவள்ளுவப்பயன் என்பது திருக்குறள். இத னைப் பரிமேலழகர் பாயிரத்தும் பிறாண்டும் முடிந்து காட்டிய முடிகொண்டு இது வடநூன் முடியும் போக்கு மாக முடிந்ததென்பது நமக்கு உடன்பாடாவதில்லை. புறப்பொருள் அகப்பொருள்களின் பிரிவாகிய அறம் பொருளின்பம் என்பதொரு வரையறையை அடியாகக் கொண்டு, வள்ளுவனார், மன்பதைகள் உய்ந்துபோமாற் றைத் தமது கருத்திற் செப்பமாகச் சீர்செய்தவாறே, இந்நூல் கூறினார் என்பதே பொருந்தும். வள்ளுவ மாலையின் நோக்கமும் இதுவே யாமென்பது கண்டு தெளிக. நைடதமுற்றும் மொழிபெயர்ப்பே. அதிவீர ராம பாண்டியர் வடமொழி நைடதத்திலுள்ள சிலே டைகளைத் தானும் தமிழில் ஏற்ற பெற்றிச் சிலேடை

திருவள்ளுவர்

கம்பர்

யாக அமைத்திருக்கின்றனர். கதையும் ஒரோவிடத்துக் கருத்துமே தழுவி யாத்தனவாவன, இதிகாசமிரண்டும். வான்மீகி ராமாயணத்தை வடமொழி வல்லவர் உரைப்பச் செவியேற்றுக் கம்பநாடர் தாம் வேண்டியவாறு இராமாயணங் கூறினரல்லது, சொல்தொறும் செய்யுள்தொறுங் கட்டுண்டு மொழிபெயர்த்துக் கூறினரல்லர். உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளான பாரத வெண்பாவும் இங்ஙனம் பெருந்தேவனாராற் செய்யப்பட்டது. வில்லிபுத்தூரர் வியாச பாரதத்தைச் சுருக்கியும் பால பாரதத்தை ஆங்காங்கு தழுவியும் பாரதத்தின் முதற் பத்துப் பருவங்களைப் பாடினர். வடமொழியில் கிருஷ்ணமிசிரன் செய்த பிரபோத சந்திரோதயம் என்னும் நாடகத்தைத் தமிழில் காப்பியமாக அமைத்தார் மாதை திருவேங்கட மன்னன் என்பவர். ஸ்காந்தம் பாகவதம் முதலான புராணங்கள் வடநூலினின்று நேராக வந்தவைகளே. திருவிளையாடற் புராணமும் ஆலாஸ்ய மான்மியமே. ஸ்தல புராணங்கள் பற்பல வடமொழிக் கதைகளை உட்கொண்டு தமிழ்ப் புலவர் வேண்டியவாறு வகுத்தனவே. சிறு நீதிநூல்களிற் சில செய்யுள்கள் வடநூற்பொருளை உள்ளிட்டிருக்கின்றன. மருத்துவ நூல்கள் பலவும் மொழிபெயர்ப்பாவன வல்ல. பதார்த்தகுண சிந்தாமணி முதலியன தமிழிற்கே உரிய மருத்துவநூல்கள். சோதிடநூல்களிற் பற்பல நிரல்பட யாத்த மொழிபெயர்ப்பேயாயினும், அறுபது வருஷப்பலன் முதலிய சில தமிழ்க்கே உரியனவாம்.

19. மொழிபெயர்ப்பு என்னலாகாத தமிழ் நூல்கள்.— இனித் தமிழிற்கே உரியன பேசலுறுவோம். ஒரு பாஷைக்கே உரிய இலக்கியமென்பது, வேறு பாஷையில் நின்றும் மொழி பெயர்க்காது, அந்தப் பாஷை வழங்கு

நிலத்தின்கண் நிகழ் பொருள்களை, உள்ளன உள்ளவாறே யாக, புனைந்துரை வகையாகுக, கவிவல்லாரும் உரை நடை வல்லாரும் கூறிப்போந்த நூல்களின் தொகுதி யாம். அவைதாம் சிறுகதைகளும் பெருங்கதைகளும் கற்பிதக்கதைகளும் தேசசரிதங்களும் அகப்பொருளும் புறப்பொருளும் முதலாகப் பலதுறைப்படும். தமி ழிற்கே உரியனவாய் இக்கூறிய துறைப்பட்ட நூல்கள் பற்பலவாகின்றன. உரைநடையா னியன்ற தொல்லைத் தமிழ் நூல்கள் வெகுவாய் இல. சீர்கருணிகர் புராணம் ஒன்று நக்கீரனார் கத்தியரூபமாக எழுதினரெனக் கூறு கின்றனர். அது நாம் கேட்டதன்றிக் கண்டதின்று. ஸ்ரீ புராணம்—கத்திய சிந்தாமணி முதலிய சில ஜைநநூல் கள் கத்தியரூபமானவைகளே. தகடூர் யாத்திரை—சிலப் பதிகாரம் முதலியன உரையிடையிட்ட பாட்டிடைச் செய்யுள்களாம்.

"பாட்டிடை வைத்த குறிப்பினானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப"

எனத் தொல்காப்பியர் வரையறுத்திருத்தலின், உரை யாமாறு தமிழர்கள் அறியாத தொன்றன்று. பாவா னியன்றன தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளாக வகுக் கப்பட்டிருக்கின்றன. பத்துப்பாட்டெனும் பாட்டுக் கள் பத்தும் தமிழ்நாட்டின் ஐந்திணை வளங்களையும் குடி களின் நிலைமைகளையும் அற்றைநா ளரசர் பெருமைகளை யும் அன்னோரது நாளோலக்கச் சிறப்பினையும் பிறவுங் கூறும். நற்றிணை நானூறு முதலாய எட்டுத் தொகை யும் தமிழ்க்கே உரிய அகப்புறப் பொருள்களைப்

பலவகையான் விரித்தியம்புகின்றன. ஆசாரக்கோவை யொழிந்த வனைக்கீழ்க்கணக்கெல்லாம் அகப்புறப் பொருளான உலகியனெறியும் வீட்டு நெறியுங் கூறுந் தமிழிலக்கியங்களாம். இவையெல்லாம் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த காலத்தன. கல்லாடம் தமிழ்க்கே யுரியது. 'கல்லாடம் படித்தவனோடு மல்லாடாதே' எனப் பழமொழியும் ஒன்று தமிழில் வழங்குகின்றது. முத்தொள்ளாயிரம் என்பதும் தமிழரசரைப் புனைந்துரைத்த நூலே. கலிங்கத்துப் பரணி—மூவருலா—மடல் முதலியன தமிழே. சிலப்பதிகாரம் மணிமேகலை முதலியனவும் தமிழ்நாட்டு நிகழ்பொருளையும் சரிதங்களையும் புனைந்துரை வகையாற் றொடுத்த பொருட் டொடர்நிலைச் செய்யுள்களாம். ஆத்திசூடி முதலியன தமிழ்க்கான இலக்கியங்களே. நாலாயிரப் பிரபந்தத்தை வேதோபநிஷத்துக்களின் சாரமெனக் கூறுவார் கூறுக. வேதமோதற் கதிகாரியாகாத காரிமாறப் பிரானது திருவாய்மொழியை, வேதாந்ததேசிகரே

"செய்யதமிழ் மறையனைத்துந் தெளிய வோதித்
தெரியாத மறைநிலங்கள் தெரிகின் றோமே"

என்றும், கம்பநாடரும்

"தோன்றா வுபநிட தப்பொரு டோன்றலுற் றார்தமக்கும்
சான்றா மிவையென்ற போதுமற் றென்பல காலுந்தம்மில்
மூன்றா யினவு நினைந்தா ரணத்தின் மும்மைத்தமிழை
ஈன்றான் குருகைப் பிரானெம் பிரான்ற னிசைக்கவியே"

என்றும் புகழ்ந்திருப்பதனால், இது தமிழேயாம். இதனை விரித்துரைப்பது நம்மைப் பொறுத்த கடனன்று. இன்னும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டிலும், வடமொழியினின்றும் மொழிபெயர்த்ததென்று

விரல்மடக்கி யெண்ணுதற்கு ஒன்றாயினும் உண்டா. இன்னும் இவ்வட்டவணையைப் பெருக்கவேண்டா. நாடக நூல்களும் இசை நூல்களும் இறந்துபோயின. இவற்றின் பண்டை நிலைமையை அறிய அவாவுகின்ற வர்கள் சிலப்பதிகார வுரையைக் கண்டு தெளிவாராக. இப்பொழுது நாமறிவன வெல்லாம் அக்காலத்துச் சங்கப்புலவர்கள் இயற்றிய பரதம்—அகத்தியம்—முறுவல்—சயந்தம்—குணநூல்—செயிற்றியம்—மதிவாணனார் நாடகத்தமிழ்நூல்—கூத்தநூல் என்றாற்போன்ற நூல்களின் பெயர்களேயாம்.

V.

20. தமிழிலக்கணம் வடமொழியின் வழிப்பட்டதோ அன்றோ என்பதை இனித் துணிதல்வேண்டும். தமிழ் மொழிகள் சீன முதலியன போல ஓரசைச்சொற்களு மல்ல: வடமொழி போல உபசர்க்கம் உயிர்வேறுபாடு முதலியவற்றால் ரூபாந்தரம் அடைவனவு மல்ல; பகுதியுடனே இடைநிலை சாரியை விகுதி முதலியவற்றை ஒட்டிக்கொள்ளும் ஒட்டுச்சொற்களே. ஆகவே இவை வடமொழிக்கு முற்றும் வேறான தன்மை யுடையன வாகின்றன.*

* In the highly-cultivated languages of the Indo-European family, post-positional additions have gradually been melted down into inflections, and sometimes even blended with the root; whilst in the less plastic languages of the Scythian group, the principle of agglutination has been more faithfully retained, and every portion and particle of every compound word has not only maintained its original position, but held fast its separate individuality. In this particular the Dravidian languages agree in general rather with the Scythian than the Indo-European; and hence in each dialect of the family there is, properly speaking, only one declension and one conjugation.—*Caldwell.*

21. **தமிழின் எழுத்துக்கள்.**—அகத்தியர் இலக்கணம் வகுத்த காலத்தில் வடமொழியின் ஒப்புமை நோக்கித் தமிழெழுத்துக்களை அந்தக் கிரமமாக வரையறுத்திருக்கக்கூடும். ஆயினும் இவற்றின் வரிவடிவின் பூர்வோத்தரத்தை இன்னும் நீர்மையாக எவரும் தலைக்கட்டவில்லை. இவற்றைக் கிரந்த எழுத்துக்களின் அமைதியாக இருக்கலாம் எனக் கூறுவாருமுளர். அங்ஙனமாயின் வடபால் யாண்டாயினும் இந்தக் கிரந்த எழுத்துக்களை எவரேனும் வடநூற் பிரதிகளில் கண்டதுண்டேல் இக்கூற்றினை ஏற்றுக்கொள்ளலாம். மணிப்பிரவாள உரைநடையில் எழுதப் புகுந்தவர்கள் வடமொழிகளைத் தகுந்த உச்சாரணத்துடன் வழங்கும்படி அமைத்துக்கொண்ட அக்ஷரங்களே கிரந்தாக்ஷரங்களாம் எனச் சில பெரியர்கள் கூறுகின்றனர். தமிழெழுத்துக்கள் தேவநாகரியினின் றமைக்கப்பட்டன என்பார் கூற்றும், அசோகமகாராசன் தென்னாட்டில் சிலாசாசனங்கள் செய்த அட்சரங்களினின்றும் அமைக்கப்பட்டன என்பார் உரையும், புறநாட்டு வர்த்தகர்களிடத்துக் கற்ற சில அட்சரங்களின் திரிவு என்பவர் யூகையும், இதுவரையில் உறுதிப்பாடுடையன ஆயினவல்ல. தமிழெழுத்துக்களைத் தொல்லைநாட்டமிழர் தாங்களே காலாந்தரத்தில் அமைத்துக்கொண்டிருக்க வேண்டுமெனச் சில ஐரோப்பியர்கள் துணிகின்றனர். ஸமஸ்கிருத அக்ஷரங்களின் சப்தத்தைக் குறிக்கும்படி வகுத்துக்கொண்ட கிரந்தாக்ஷரங்களுள்ளும், சில காலமாக நாம் பெரும்பான்மையாய் வடசொற்களை வரிவடிவில் காட்டுதற்கு இன்றியமையாதனவாய்க் கொண்டு வழங்குவன ஷ—ஸ—ஹ—ஜ—க்ஷ என்னு மைந்துமேயாம். வேறெந்த நெடுங்கணக்கிலும் பெறலாகாத சில எழுத்துக்கள் தமிழ்க்கண் உளவாதலும்,

'மெய்ய் னியற்கை புள்ளியொடு நிலையல்.'

'எகர ஒகரத் தியற்கையு மற்றே'

என்பன போன்ற தொல்காப்பியச் சூத்திரங்களும், குற்றிய லிகர குற்றிய லுகரப் புணர்ச்சியும் இக்கூற்றினை வற்புறுத்துகின்றன. தமிழேயான சொற்களில் சில சப்தங்களைக் குறித்தற்கான எழுத்துக்கள் இல்லை என்பது மாத்திரம் உண்மையே. அஃதாவது வல்லெழுத்துக்கள் பல ஒலிகளைக் குறிக்க நிற்பதாம். சந்தியக்கரங்கள் எனப்பட்ட ஐகார ஔகாரங்கள் மிகையென்பதும் உண்மையே. ஐகார ஔகாரங்களையும் அவை ஊர்ந்துவரும் உயிர்மெய்களையும் ஒழிப்பினும் தமிழ் இடர்ப்படாது.

22. தமிழிலக்கணத்தின் சிறப்பியல்புகள்.—தமிழுடனே வடமொழியிலும் புலமை நிரம்பிய சிவஞான முனிவர் "தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும் குறியீடுகளும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா" என்றும், "ஈண்டுக் கூறும் பொருட்பாகுபாடுகள் பொதுவாகாது தமிழிற்கே சிறந்து வேறோன்றாற் பெறப்படாமையின், இப்பொருள் பற்றிவரும் பரிபாடல் கலி அகநானூறு புறநானூறு ஐங்குறுநூறு நற்றிணை குறுந்தொகை ஆற்றுப்படை பதிற்றுப்பத்து முதலிய செய்யுள் ஆராயப் புகுந்தார்க்கு இப்பொருட்பாகுபாடு உணராக்கால் குன்று முட்டிய குரீஇப்போல இடர்ப்படுவர்" என்றும், "சோதிட முதலிய பிறகலைகளெல்லாம் ஆரியத்தினும் தமிழினும் ஏனை

சிவஞான முனிவர்

மொழிகளினும் வேறுபாடின்றி ஒப்ப நிகழ்தலின் அவற்றை வேறு விதிக்க வேண்டாமையானும், இயலிசை நாடகமென்னு மூன்றும் தமிழ் நிலத்துச் சில வேறுபாடுடைமையின் அவற்றை வேறு விதிக்கவேண்டுதலானும், அதுபற்றி அகத்தியத்துள் இம்மூன்றுமே எடுத்தோதினார்" என்றும், "ழகர றகர னகரங்கள் மூன்றுந் தமிழெழுத்துக்கள் என்பதறிவித்தற்கு இறுதிக்கண் வைக்கப்பட்டன" என்றும், "வடமொழி வினைச்சொற்களுள் விகுதியே காலங்காட்டு மாகலின், இடைநிலை வினைமுதற் பொருண்மை முதலியன பற்றிவரும் வினைக்குறிப்பு வடமொழிக்கின்று" என்றும் தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் ஆங்காங் குரைத்திருப்பதே, தமிழிலக்கணம் வேறு வடமொழியிலக்கணம் வேறு என்பதற்குப் போதிய சான்றும். வடமொழியில் ஒருபொருளையும் இருபொருளையும் இரண்டின் மிக்கவற்றையும் குறிக்கும் எண்ணுக் குறியீடுகள் வெவ்வேறு உள்ளன. தமிழில் ஒருமையும் பன்மையும் ஆகிய இரண்டே. "திணை யுணர்த்தும் வினைவிகுதியும் ஆண்பால் பெண்பா லுணர்த்தும் வினைவிகுதியும் வடமொழிக்கில்லை. தமிழ்மொழிக்கும் அஃறிணைக்கண் ஆண்பால் பெண்பா லுணர்த்தும் வினை விகுதியில்லை. தமிழ் மொழிக்குப் பிரதமாவிபத்தியும் இலிங்கத்திரயமு மில்லை."

23. அணியிலக்கணம்.—இனி அணியியலில் தமிழ்க் குரியதாய்த் தொல்லை தொட்டு மரபாய் வருவது உவமை யொன்றுமே. ஏனையவெல்லாம் தண்டியாசிரியர் மாறனலங்கார முடையார் குவலயானந்தமுடையார் முதலியோர் வடமொழியினின்றுந் தழுவிக்கொண்டனவேயாம். ஆயினும் உலகில் வழங்கும் மொழிகளெவற்றிலும் உவமையொன்றே அடிப்பட்டு நடந்தியல்வது

வெள்ளிடை விலங்கலாம். ஏனைய அவ்வொன்றில் நின்றே கிளைப்பன. இதுபற்றி யன்றோ தொல்காப்பியனாரும் உவமவிய லொன்றே கூறிப்போந்தார். வடமொழியில் நின்றுங்கொண்ட ஏனைய அணிகளிற் பலவற்றிற்குத் தமிழில் இலக்கியமில்லாமற் போனதில்லை. அதனாலன்றே "அணியிலாக் கவிதை பணியிலாவனிதை" என்றது அகத்தியம். இவ்விலக்கியங்களில் அமைந்து கிடக்கும் அணிகளைக் குறியீடுவாயிலான் வழங்கற் பொருட்டே கருவி மாத்திரையான் அவை அங்ஙனங் கொள்ளப்பட்டன. சொல்லணியில் சித்திர கவிகட்காவனவெல்லாம் வடமொழியையே அடியாகவுடையன என்பது கூறாதே யமையும்.

24. தமிழின் மேம்பாடு: நக்கீரர் பாட்டு.—இத்துணை கூறியும், இன்னும் தமிழை இழித்துக்கூறி அபசாரப்பட்டு அழிகின்றாருளரேல், நாம் அவரை

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரணர் கபிலரும் வாழி—யரணிய
வானந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோட
னானந்தஞ் சேர்கசுவா கா"

எனச் சாகப்படாமல், அந்தோ அவர் எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் எனப் பரிந்து,

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையால்
செந்தமிழே தீர்க்கசுவா கா"

என்று நக்கீரனார் அங்கதப்பாட்டைப் பன்முறையும் உருவிட்டு மந்திரித்து அவரை வாழ்விப்போம்.

VI.

25. அச்சு முதலிய சாதனங்களால் தமிழ் அடைந்து வரும் சீர்திருத்தம்.—அச்சுப்பிரதிகள் ஏற்பட்டபிறகு தமிழை ஓதும் சிரமத்தில் பெரும்பாகங் கழிந்துவிட்டது. பழைய ஏடுகளைப் படிப்பது பொருளுணர் வில்லார்க்கு இயலாது. தொல்காப்பியத்தைத் தொலகாப்பியமென்றும், மறுதரம்காயை மறுதாமக்காயென்றும், மகாநவமி விரதத்தை மகரநவமி விரதமென்றும், வெளவாலை வெளவா லென்றும் ஔவியம் என்பதனை ஒளவியமென்றும் படித்த காலம் பழங்கால மாய்விட்டது.

மண்டல புருஷரே, தேனீ எனப் பொருள்படுவதான சரகம் என்கிற வடசொல்லைச் சாகம் எனக்கொண்டு, 'சாகஞ் சாகினி வெள்ளாடு தேக்கெனுந் தருவு தேனீ' எனத் தமது சூடாமணி நிகண்டில் பாடிவிட்டனரென்றால், சாதாரண மாணுக்கர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள்? 'மவ்விடப் பவ்வாயிற்று' 'வவ்விடக் கவ்வாயிற்று' என்கிற மூதுரைகளை இப்பொழுது மறந்துவருகிறோம். ஒற்றுக்கள் புள்ளியிடப் பெறுதலால், இப்பொழுது எழுதுகின்றவன் ஏட்டைக் கெடுப்பதுமில்லை, படிக்கின்றவன் பாட்டைக் கெடுப்பதுமில்லை. பன்றிமுள் எனப் பொருள்படும் சலலம் என்கிற வடசொல்லைத் தமிழில் மண்டலபுருஷர் சல்லம் என நிகண்டில் வழங்கிவிட்டனர். இப்போது மாணுக்கர்க்குக் கஷ்டசாத்தியமாக இருப்பதெல்லாம் தந்நகர றன்னகரங்களை இடமறிந்து வழங்குவதும், இடையினரகரத்தையும் வல்லின றகரத்தையும்பொருளறிந்து பிரயோகிப்பதுமே. கொற்றனுக்குச் சாத்தன் ஐந்நூறு ரூபா பாக்கியென்று வைத்துக் கொள்வோம். அத்தொகையை அனுப்பும்படி எழுதிய கடிதத்துக்குச் சாத்தன் "இப்பொழுது முழுத்தொகையும் கொடுக்கமுடியாது. மூன்னூறு ரூபாய் வருகிற

வாரம் அனுப்புவேன்" என்றெழுதிய கடிதத்தைக் கொற்றன் இலக்கண விவேகமுள்ளவனாக இருந்தால் எவ்வளவு தொகை வருமென்று எதிர்பார்ப்பான்? அவ்விவேகம் இல்லாவிட்டால் என்ன செய்வான்? 'பாலைக் கறந்தான்' என்பதைப் பாலைக் கரந்தான் என எழுதினால், பொருள் வேறுபடாதா? நன்னூலும் அதன் உரையும் ஏற்பட்ட பிறகு முதனிலை இறுதி நிலைகளை யறிந்து சொற்களை நிர்ணயிப்பது சுலபமாக இருக்கின்றது. பழைய இலக்கியங்கள் ஒவ்வொன்றாய் அச்சிடப்படுதலின், அவற்றில் உள்ள பிரயோகங்களானவை, சொற்களை நிர்ணயிப்பதில் எழுகின்ற ஐயநிகழ்ச்சிகளைக் களைவதில் பெருஞ்சாதனமாகின்றன. பழைய இலக்கியங்கள் எளிதாய்க் கிடைப்பதன்றி, அகராதிகளும் ஏற்பட்டிருப்பதனால், உலக வழக்கில் சிதைந்து மருவிய சொற்களின் திருத்தமான உருவங்களை நிர்ணயிப்பதும் முன்னிலுங் காட்டில் மிகவும் எளிதாக இருக்கின்றது. வர்த்தமான பத்திராதிபர்கள் தமிழ்ப் பயிற்சி மிக்கவர்களைக்கொண்டு பத்திரிகைகளை நடத்தினால் இன்னும் பல நன்மைகள் உண்டாகிப் பெண்டிரும் நலமெய்துவர். பிழையின்றி எழுதப் பழகிய மாணாக்கன் சிறியனாயினும் அவனை அரையின் மிக்க புலமை வாய்ந்தவன் என்றே கொள்ளலாம். இது செய்யகில்லாதவர்கள் பாட வல்ல பாவலரேனும் பிரசங்கிக்கவல்ல நாவலரேனும், அவர்கள் இன்னுமொருமுறை பள்ளிக்கூடம் போகற்பாலரே. ஆங்கிலேயரில் கடிதமெழுதுவதில் எழுத்துப்பிழை படினும் பெண்பாலர் தாமும் அவமான முண்டானதாகக் கருதுகின்றனரே.

26. தமிழில் வாசகப் பாங்கு.—இங்கிலீஷில் மாத்திரம் மிக்க புலமையடைந்த சிலர், "தமிழென்ன? ஏதாகிலும் பிரசங்கிக்க வேண்டினால், அசுவதாட்டியாய் அது வாக்

கில் வருவதில்லை. எழுதப் புகுமிடத்தும் இங்கிலீஷில் மேக்காலே டிக்வின்ஸி முதலானவர்கள் எழுதுகின்ற சாயலாய் எழுத வருவதில்லை" எனப் பழிப்பதுண்டு. தமிழ்க் கத்திய நூல்கள் இப்பொழுது சில காலமாகத் தானே தலையெடுத்து வருகின்றன. இராஜாங்க விஷயமாகக் கட்சி கட்டிக்கொண்டு சபைகூடிப் பேசுவதும் பத்திரங்களில் எழுதுவதும் ஆங்கிலேயரிற்போல நமக்கு இன்னும் அதிக சாதகமாகவில்லை. தமிழ் ஒட்டுச்சொற்களுள்ள பாஷையாதலால் இதில் மனோபாவங்களைப் பலபடக் குறிக்குஞ் சொற்கள் சாலா. ஆயினும் "சட்டியிலிருக்கிறது தானே அகப்பையில் வரும்"; "உண்டது தானே ஏப்பம் வரும்": இவர்கட்குத் தமிழில் பயிற்சி எவ்வளவோ, அவ்வளவுதானே வாக்கு வன்மையும் எழுதுந் திறமும் உண்டாகும். "சேணிற் பறக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன் திட்டேறு தட்டேறுகாண்" என்னும் உரையை இவர்கள் அறியார்களோ? "Tamil is the only vernacular literature in India which has not been content with imitating Sanskrit but has honorably attempted to emulate and outshine it. In one department at least, that of Ethical Epigrams, Sanskrit has been outdone by Tamil." எனக் கால்டுவெல்துரையும், "Perhaps no language combines greater force with equal brevity; no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind. . . . The language thus specific gives to the mind a readiness and clearness of conception, whilst its terseness and philosophic idiom afford equal means of lucid utterance." எனப் பேர்ஸிவேல் துரையும், "It is one of the most copious, refined and polished languages spoken by man" எனப் பிற

ரொருவரும் கூறியிருப்பனவற்றை நோக்கியாயினும், இவர்கள் தமிழை வளர்க்க ஊக்கங்கொள்வார்களாக.

27. இங்கிலீஷிலில்லாத சில சிறப்பியல்புகள் தமிழில் உண்டு. தாய் தகப்பன் நீங்கலான ஏனைமுறைப் பெயர்களெல்லாம் இங்கிலீஷில் தொடர்மொழிகளே. நாம் அண்ணன் என்பதை அவர்கள் மூத்த சகோதரன் என்றும், தம்பி என்பதை இளைய சகோதரன் என்றும், அம்மான் என்பதைத் தாயுடன் பிறந்தவன் என்றும், அத்தை என்பதைத் தகப்பனுடன் பிறந்தவள் என்றும், இங்ஙனம் தொடர்மொழிகளாகவே வழங்குவர். நாம் வந்திலன்—சென்றிலன் என ஒரு சொல்லாய் வழங்கும் எதிர்மறை முற்றுக்களை இங்கிலீஷில் உரைப்பதற்கு மூன்று சொற்கள் வேண்டும். தெரிநிலையுங் குறிப்புமான ஒவ்வொரு வினையாலணையும் பெயரையும் இங்கிலீஷில் பல சொற்களின்றி அமைக்கலாகாது. வந்தாய்க்கு—என்பதை வந்தவனாகிய உனக்கு எனப் பொருள்படுவதாய் நான்கு சொற்களால் அமைக்கவேண்டும். அடியேனுக்கு என்னுங் குறிப்புவினையாலணையும் பெயரை அமைக்க ஆறு சொற்கள் வேண்டும். நம்முடைய பெயரெச்ச வினையெச்சங்களும் சொற்சுருங்குதற்கு அநுகூலமாக இருக்கின்றன. வந்த மனிதன் என்பதை அமைக்க அவர்களுக்கு நான்கு சொற்கள் வேண்டும். அவன் வந்துபோனான் என்னும் ஒரு வாக்கியத்தை அவர்கள் இரண்டு வாக்கியமின்றி உரைக்க இயலாது. அவர்களுக்கு வேற்றுமைத் தொகை வினைத்தொகை உவமைத்தொகை அன்மொழித்தொகையில்லை.

தமிழ் வினைகளின் விகுதிகளே திணை பால் எண் என்னுமூன்றையும் ஒருங்கே காட்டிவிடுகின்றன. இங்கிலீஷில் வினைகளின் எண்களை மாத்திரம் எளிதில் அறியலாம்.

பெரும்பான்மையாய் எழுவாயின் பொருளறியாமல் முடிபின் தின்ஸபால்களை அறியலாகாது. சாதாரண சம்பாஷணையில் நாம் எழுவாயின்றியே கருத்தைக் குறிக்கலாம். இங்கிலீஷில் எழுவாயின்றி உரைக்க இயலாது.

உலகவழக்கில் நாம் செயப்பாட்டு வினைகளையெல்லாம் செய்வினைகளாக வழங்குகின்றோம். இது அவர்களுக்குப் பெரும்பான்மையாய் இயலாது. தான் வியாதியாக இருக்கிற சங்கதியைப் பிறனிடத்தில் அறிவிப்பதானால் "நான் வியாதியாய் இருக்கிறேன்" என்பதே மரபு: தமிழில், "எனக்கு உடம்பு அசௌக்கியமாயிருக்கிறது" என்பதே மரபு. இங்ஙன முரைப்பதில் இங்கிலீஷ் மரபு அஹம்பாவத்தை உணர்த்துவதாக இருக்கின்றது; தமிழ் மரபோ தேஹதேஹி பாவத்தைத் தழுவி ஞானசாரமாக இருக்கின்றது. தமிழில் ஒருவரைப் பலர்பாலால் வழங்குகின்ற மரியாதை இங்கிலீஷிலுமில்லை, வேறெந்தப் பாஷையிலுமில்லை. பெரியோர்களுடைய செயல்களை நாம் அவர் வந்தருளினார் செய்தருளினார் எனக் கௌரவமாகக் கூறும் விதமும், ஏவுகின்ற வினையின் இறுமாப்பைக் குறைக்கும் வியங்கோள்களின் அழகும் தமிழ்க்கே உரியன.

இரண்டாம் பாகம் — தமிழர் புராதன நிலைமை.

28. **தமிழகம் & தமிழர்.**—இங்ஙனமாய ஏற்றம் பெற்ற தமிழ் வழங்கு நிலம் இப்போது "வடவேங்கடந் தென் குமரி யாயிடை" அமைவதில்லை. ஈழமண்டலம் என்னும் இலங்கைத் தீவிலும் பர்மா சீயம் முதலிய தேசங்களிலும் மோரிஸ் தீவிலும் குடக்கிந்திய தீவுகளிலும் ஆப்பிரிக்காவின் தென்கோடிப் பிரதேசங்களிலும் தமிழர்கள் குடியேறு நிற்ப, அவ்விடங்களிலெல்லாம் தமிழ் வழங்கலாயிற்று. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே கணக்கிட்ட குடித்தொகையின்படி தென்னாட்டில் உள்ள தமிழர் 12,413,500த்துச் சில்லரையாம். ஐந்து வருஷங்களுக்கு முன்னே எடுத்த கணக்கின்படி 15,543,383. பிரெஞ்சு மாகாணங்களிலுள்ள தமிழர்கள் 160,000க்கு மேற்படுகின்றனர். ஈழமண்டலத்தில் சுமார் எட்டி லக்ஷம்பேர் இருக்கின்றனர். நூறு பாஷைகள் வரையில் வழங்குகின்ற இந்தியாவிலுள்ள முப்பதின்மிக்க கோடி ஜனங்களில் தமிழர்கள் ஏறக்குறைய பத்தொன்பதின்மரில் ஒருவராகின்றனர். தென்னிந்தியாவில் உள்ள ஜனத்தொகையில் தமிழ் பேசுகின்றவர்கள் நூற்றுக்கு நாற்பது வீதமென்றும், கல்வியறிவுடையவர்களில் தமிழ்ப்பயிற்சி யுள்ளவர்கள் நூற்றுக்கு ஐம்பத்தைந்து வீதமென்றும் கணக்கிட்டிருக்கிறது. தக்ஷிண கோளார்த்தத்தின் வட்டத்தில் பாதியின் மிக்க பிரதேசங்களில் பரவியிருக்கின்ற இவர்கள், இன்னும் வடாதும் தெனாதும் குடக்குங் குணக்குமாகப் பரவுகின்ற நோக்கம் உடையவர்களாகவே காண்கின்றனர். ஆகவே தமிழும் இங்கிலீஷைப் போலவே பற்பல தேயங்களிற் பரவி நிலைபெறும் என்பதில் ஐயமில்லை.

29. தமிழருடைய குணங்குறிகள். — தமிழர்கள், ஐரோப்பியரையும் வேறு சிலரையும்போல உயரமும் உடலுரமும் பெற்றவர்களல்லராயினும், அதிக அந்தசந்த முடையவர்களாய், ஆரியருடைய முகவிலாசத்தை ஒத்த உருவமைந்தவர்களான ஒரு தனிக்கூட்டத்தினர் எனப்படுகின்றனர். இவர்கள் கோபுரம் போன்றதாய் நுனிகூரிய மூக்கினையும் கரிய மயிரினையுங் கண்ணினையும் உடையவர்கள். இவர்களுக்கு வாய் பெரிதாகவும் உதடு தடித்தும் இருக்கும். முகம் அண்டாகாரமானது.* போர்புரிவதில் ஏனை இந்தியரைக் காட்டில் மிக்க திறமுடையவர்களென்று சில ஆங்கிலேய தண்டத்தலைவர்கள் தமிழரைப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். இவர்களுக்குப் ‘பழையது மிகுந்த இடமே காணியாட்சி’. எங்குப் பொருளீட்ட இயலுமோ அங்கு இவர்களைக் காணலாம். ஆயினும் இவர்கள் சுவதேசாபிமானம் குறைந்தவ

* [When we compare the physical type of cultivated high-caste Dravidians with that of the Brahmans, no essential difference whatever, and very little difference of any kind, can be observed. In many instances the features of the high-caste Dravidian women are as delicately formed and regular as those of Brahman women themselves, whilst their complexions are equally fair; and if any difference appears, it consists not in Mongolian breadth of face, but in greater elongation and narrowness. The Dravidian type of head will even bear to be directly compared with the European. Compare, for instance, the heads of the Tamil or Telugu pleaders and translators in any zillah court with that of the presiding English Judge; and it is evident that the Dravidian heads differ from the English only in being smaller and narrower,—with a preponderance in the former of the signs of timidity and subtility, in the latter of physical and moral courage.

Amongst the lower class of the Dravidians, I have occasionally observed a type of head which is somewhat inclined to be what is called Mongolian, that is, it exhibits unusual breadth across the cheek-bones, a pyramidal forehead, a somewhat oblique position of the eyes, and a pyramidal nose with a broad base.]—*Caldwell.*

ரல்லர்; பொருளீட்டிக்கொண்டு சொந்த ஊரை யடைந்து சுகம் பெற்றிருக்க வேண்டுகின்றவர்களே. வரவிற் கேற்ற செலவு செய்யும் குடித்தனப்பாங்கு உடையவர் களே யாயினும், தமிழர்கள் தான தருமங்களை வெகு வாய்க் கொடுக்கின்றவர்களே யன்றி, அவைகளை வெகு வாய் ஏற்கின்றவர்கள் அல்லர். இருந்த இடத்திலே இருந்து வீண்காலம் போக்காமல், இவர்கள் கஷ்ட சாத்தி யமான காரியங்களையும் சாதிப்பார்கள்: எத்தனை கஷ்ட நிஷ்டூரங்களையும் அதிக பொறுமையுடனே ஈடுகொடுத் துத் தாங்குவார்கள். ஒருவரை யொருவர் காணுமிடத் தில் இவர்கள் மேதை மரியாதை தப்புகிறதில்லை. இவர் களில் அனேகர் வெகு விசித்திரமான ஞாபகசக்தி யுடை யவர்கள் என ஐரோப்பியரே மெச்சிக்கொள்ளுகின்ற னர். கற்பு விஷயத்தில் பெண்பாலினர் பெரும்பான் மையாய்க் கண்ணுங் கருத்துமா யிருப்பவர்கள். இல் வாழ்க்கையில் நேரும் இன்ன லிடைஞ்சல்களையும் பாரா ட்டாமல் எவ்விதத்திலும் கணவருடன் இணங்கி நடப் பது இவர்களில் சுவபாவமாக இருக்கின்றது. ஆண்க ளிலும் பெண்களிலும் சிற்சிலரிடத்தில் பொய்ம்மை சிற் றின்ப விருப்பமுதலிய துர்க்குணங்கள் உள்ளன. தமி ழர்களுடன் நெருங்கிப் பழகிய கோவர் என்னும் ஆங்கி லேயர், "உண்மை உழைப்பு கற்பு நடுவுநிலைமை முத லானவற்றைக் கடவுளர் வெறுப்பினும், இவர்கள் வெறார்: குடும்ப அமைதிக்கும் க்ஷேமத்துக்கும் சாதன மான மர்மங்கள் இவைகளே என்பது தமிழர்களுக் குக் கைவந்த விஷயம்" எனச் செப்பியிருக்கின்றனர்.

30. தமிழர்களுடைய புராதன நிலைமையை ஆராய்ந் தறிவதற்குச் சரித முதலான சாதனங்கள் இல்லை. இல் லாவிடினும், பழைய இலக்கண இலக்கியங்கள் இதற்கு

ஒருவாறு சாதனமாகும். இவர்களில் வழங்கி வரும் பழமொழிகளும் அநேக விஷயங்களை அறியுங் கருவிகளாகின்றன. பாஷையில் வழங்கும் சொற்களின் ஆராய்ச்சியாலும் சிலசில அமிசங்களை நாம் ஒருவாறு துணியலாம். சிலாசாசனங்கள், சிற்சில செய்திகளை அறிய அநுகூலமாகின்றன. இவர்களோடு முற்காலத்தில் வர்த்தகஞ் செய்தவர்கள் தங்கள் சரிதங்களில் குறித்திருப்பனவும் அனேக அதிசயமான சங்கதிகளை விளக்குகின்றன. நெடுங்கால முன்னர் வெள்ள முதலியவற்றால் புதையுண்டு தூர்ந்துபோன கட்டடங்கள் அணிகலன்கள் வினோதப்பொருள்கள் சிற்சில இப்பொழுது ஓரோவிடங்களிற் கிடைப்பனவாய்த் தமிழர்களுடைய அக்காலத் தொழிற்றிறங்களை விளங்கச் செய்கின்றன. இயன்றமட்டில் சில பகுதிகளை இனி விரிக்கப் புகுவோம்.

I.

31. **தொல்காப்பியமும் சங்கவிலக்கியங்களும் சாதனமான ஆராய்ச்சி.**—அவ்வக்காலத்தில் ஏற்படும் மிருதிகள் அவ்வக்கால வழக்குகளையும் ஒட்டியே ஏற்படுவனவன்றி, முன்னுள்ள மிருதிகளைத் தொகுத்தும் விரித்தும் மாத்திரம் கூறுவனவல்லவாதல்போல, இலக்கணங்களும் அவ்வக்கால இலக்கியங்களையும் வழக்குகளையும் ஒட்டியே ஏற்படுவனவன்றி, முற்பட்ட இலக்கணங்களைத் தொகுத்தும் விரித்தும் மாத்திரங் கூறுவனவல்ல. கடைச்சங்கத்தார்க்குத் தொல்காப்பியம் இலக்கணமென்றும் அவர்களுடைய இலக்கியங்களெல்லாம் அவ்விலக்கணத்தோடு முரணாமல் அதனை ஒட்டியே போந்தன வென்றுங்கொண்டு, காலவேறுபாட்டில் ஏற்பட்ட இலக்கியங்களையும் தேசாசார குலாசாரங்களையும் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்தோடு இடர்ப்பட்டுப்

பொருந்திவிட்டதனால், சில தூரபிப்பிராயங்கள் எழுந்து உலவுவனவாய் வீண்வாதங்களை உண்டாக்கிவிட்டன. தேயவியற்கையும் குலமரபும் தொழின் முயற்சிவகைகளும் நாட்குநாள் வேறுபட்டு வருதலின், பொருளிலக்கணமும் காலத்துக்குக் காலம் வேறுபட்டேவரும். கடைச்சங்கத்தினர் காலத்துக்கிப்பால் அக்கால இலக்கியங்களையும் வழக்காறுகளையும் ஒட்டித் தொல்காப்பியத்தை இன்றியமையா அளவாகத் தழுவி எவரேனும் வழி நூலாகப் பொருளிலக்கணம் வேறு செய்திருப்பரேல் அனேக துரபிப்பிராயங்களுக்கு இடம் நேர்ந்திராது. சந்துவிட்டால் வந்துவிட்டேன் என்பதுபோல், சூத்திரங்களினிடையில் சந்து பொந்துகளில் அசையாக வருகின்ற இடைச்சொற்களையும் உபலக்கணம் இலேசம் புறனடை முதலியவற்றையும் ஆதரவாகப் பற்றிக்கொண்டு, இலக்கணம் இயற்றிய ஆசிரியன் கருதாதவற்றையெல்லாம் அணுவை மேருவாக்கியும் மேருவை அணுவாக்கியும் துறப்பது உரையாசிரியர்களுக்கு ஒழியாத மணியமாகிவிட்டது. சரித்திர வாராய்ச்சி சற்றுமில்லாத காலத்தில், இங்ஙனம் உரையாசிரியர்களும் பிறரும், தமிழ்நாட்டு அரசர் வணிகரை ஆரிய க்ஷத்திரிய வைசியரோடு அபேதப்படுத்தியும் ஆரிய சூத்திரரை வேளாளரென்றும் வேளாளரை ஆரிய சூத்திரரென்றும் மாறுடியும் போந்தமையால், பொருளதிகார மரபும் பிறவும் மரபழிவனவாயின. "நாடக வழக்கினு முலகியல்வழக்கினும் பாடல் சான்ற புலனெறிவழக்"கினைக் கொண்டு தமிழ் நாட்டிலிருந்த குடிகளின் தொழின்மரபு முதலியவற்றை அகத்தியரும் தொல்காப்பியரும் வகைப்படுத்தி யுரைத்தனரேயன்றி, இன்னவர் இன்னவர் இன்ன இன்ன ஒழுக்கமும் தொழிலும் மேற்கொண்டு ஒழுகற்பாலர் என விதித்திலர். உண்மையான இந்த தூரதிருஷ்டிக் கண்ணுடியைக்

கொண்டு ஆராய்கின்றவர்கள் தமிழ்நாட்டின் பண்டைப் புராதன நிலையை ஒருவாறு ஆராயக்கூடும். இறவாது எஞ்சிநிற்கும் இலக்கணங்களில் முற்பட்டதான தொல் காப்பியத்திற் பொருளதிகாரம் இதற்கியைந்த சாதன மாக இருத்தலின், அதன் சார்பான சாத்தியங்களை முன் னர் ஆராய்வாம். இவ்வாராய்ச்சியில் அபிமானமான பூதக்கண்ணாடியை அகலவிடுவோம். சந்தர்ப்பம் பொருந்துகின்ற இடங்களில் சங்கவிலக்கியங்களைத் தழு விக்கொள்வோம்.

A. இல்வாழ்க்கை

32. **காந்தர்வ விவாகம் & கரணம்.**—முற்காலத்தில் தமிழ்நாட்டில் கந்தர்ப்ப விவாகம்போன்ற களவொழுக் கம் உளதாயிருந்ததென்பதும், அக்களவொழுக்கத்தின் வழிநிகழ்ந்து பின்னைத் தமரால் பெற்றெய்துதலாகிய கற்பொழுக்கமும் உளதாயிருந்ததென்பதும் விளங்குகின் றன.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே."

கற்பாவது, கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன், தலைவியைக் கொடுத்தற்குரிய முறையினை யுடைய இருமுதுகுரவர் முதலாயினோர் கொடுப்ப, வேள் விச் சடங்கோடேகூடக் கொள்வதாம். இந்நெறியில் நிக ழுங்கால் இவளை இன்னவாறு பாதுகாப்பாயெனவும், இவ னிடம் இன்னவாறே நீ குற்றேவல் செய்தொழுகுவாய் எனவும், அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திரவகையால் கற்பிக்கப்படுதலின், அத்தொழில் கற்பென்பதாயிற்று. தாயொடு பிறந்தாரும் தன்னையரும் தாயத்தாரும் ஆசா னும் முதலியோர் கொடைக்குரியர்.

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே" என்றும

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப"

என்றும் கூறுதலான், கரணமின்றியே கற்புநெறி நிகழ்ந்த காலமு முண்டு என்பது மலையிலக்காம்.

"வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ்செய்து" (சிலப்பதிகாரம்.)

என்றும்,

"நெறியறி செறிகுறி புரிதிரிபறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையும் மம்பலும்
மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்" (குறிஞ்சிக்கலி-3.)

என்றும் வருவன, கடைச்சங்கத்தார் காலத்தில் இக்கரணம் பெருவரவிற்றாய் உலகவழக்காயினமை புலப்படுத்துகின்றன.

33. தழையும் கண்ணியும்.—களவொழுக்கத்தில், ஏகாந்தமான இடத்தில் தலைவன் தலைவியை எதிர்ப்பட்டு வருகின்றவன், அதற்கிடையீ டுண்டாக, இனித் தோழியின் வாயிலாய்த் தலைவியை எதிர்ப்படல் கருதி, தழையுங் கண்ணியும் பிறவும் கையுறையாகத் தோழியைக் குறைநயப்பதும், அக்கையுறையைத் தோழி தலைவியிடம் ஏற்பிப்பதும் வழக்கம். இங்ஙனங் கையுறை கொடுப்பது தலைவன் தன் குறிப்பை உணர்த்துவதற்கு ஒரு வாயிலாகும். இதனை யேற்பித்தல் தலைவன் தலைவியது அன்

யைப் பெற்றபடியாகக் குறிப்பித்தலாம். தழையாவது தளிராலும் மலராலும் செய்யப்படுவதோருடை விசேடம்.

"அளியதாமே சிறுவெள்ளாம்பல்
இயளைமாகத் தழையாயினவே" (புறம்-248.)

என்பது இவ்வழக்கத்தை விளக்குமா றறிக.

34. மடலேறுதல்.—இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலேறுதலே பொருளெனக் கொள்வதுண்டு. மடலேறலாவது:—தலைவன் ஒவ்வாக் காமத்தால் பனங்கருக்கால் குதிரையும் பனந்தருவினுள்ளனவற்றால் வண்டில் முதலானவுஞ் செய்து அக்குதிரையின் மேல் ஏறுவது. மடலேறுவான், திகம்பரனாய் உடலெங்கும் நீறு பூசி, கிழி ஓவியர் கைப்படாது தானே தீட்டிக் கிழியின் தலைப்புறத்தில் அவள் பெயரை வரைந்து கைப்பிடித்து, ஊர்நடுவே நாற்சந்தியில் ஆகார நித்திரையின்றி, அக்கிழிமேல் பார்வையுஞ் சிந்தையுமிருத்தி, வேட்கை வயத்தனாய் வேறுணர்வின்றி, ஆவூரினும், அழல் மேற்படினும் அறிதலின்றி, மழை வெயில் காற்றால் தான் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங் கூடிவந்து 'நீ மடலேறுதியோ? அவளைத் தருதும்: சோதனை தருதியோ?' என்றவழி இயைந்தானாயின், அரசனுக் கறிவித்து, அவனேவலால் அவன் இனைந்துரையத் தந்து மடலே றென்றவழி ஏறு முறைமை.

35. தாரம் பல கோள்வதும் தபுதார நிலையும்.—

"பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி யெதிர்ப்பா டாயினும்" (தொல்.)

என்பதனால் அக்காலத்தில் பலதாரங் கொள்வதும் வழக்காமாறு தெளியப்படுகின்றது. மனைவியை இழந்த கண

வர் வழிமுறைத் தாரம் எய்துவது தபுதாரநிலை என்னுங் காஞ்சித்துறையால் போதரும்.

36. உடன்கட்டையேறுதல் & கைம்மை நோன்பு.— கணவனை இழந்த மனைவியர், உழுவலன்பால் கணவன் முடிந்தபொழுதே உடன் முடிந்துபோதலை நினைத்துக் கணவனோடு எரிபுகுதலும், அல்லது கைம்மை நோன்பு மேற்கோடலும், மரபாக இருந்தது. இங்ஙனம் கைம்மை நோன்பு கொண்டொழுகுவோர் நிலைமை

"நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு
முயவற் பெண்டிரேம்" (புறம்-246.)

என்றும்,

"அளியதாமே சிறுவெள் ளாம்பல்
இளையமாகத் தழையா யினவே
இனியே, பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுது [மறுத்
தின்னா வைக லுண்ணும்
அல்லிப் படூஉம் புல்லா யினவே" (புறம்-248.)

என்றும் வரும் புறப்பாட்டுக்களானும்,

"கலந்தவனைக் கூற்றங் கரப்பக் கழியா
தலந்தினையு மவ்வளைத் தோளி—யுலந்தவன்
தாரொடு பொங்கி நிலனசைஇத் தான்மிசையுங்
காரடகின் மேல்வைத்தாள் கை"

என்னும் வெண்பாமாலையானும் விளங்கும். கி. பி. 500 ஆண்டுக்கு முற்பட்ட இந்திய இலக்கியங்களில் உடன் கட்டை யேறுதலைப்பற்றி யாதொரு குறிப்பும் இல்லை யென இக்காலத்துச் சில இந்திய சரிதவாசிரியர்கள் கூறு

வது வடமொழி யிலக்கியங்களை நோக்கிப்போனும். பரத்தைமை அக்காலத்திலும் மிக்கிருந்தது.

37. கைம்மையர் கோலம்.—

"அறிந்தோன் மன்ற வறிவுடை யாளன்
இறந்தோன் றானே.........
மெல்லியன் மகளிரு மிழைகளைந் தனரே" (புறம்–224.)

என்றும்,

"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி யுணவின் மனைவி" (புறம்–250.)

என்றும்,

"நிரை யிவட்டந்து நடுக லாகிய
வென்வேல் விடலை யின்மையிற் புலம்பிக்
கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகளே" (புறம்–261.)

என்றும் வருவன கணவனை யிழந்தவர் ஆபரணங் களைவதும் கூந்தலை நீக்கிவிடுதலுமாகிய வழக்கங்களை உணர்த்துகின்றன.

"ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர
அவிரறல் கடுக்கு மம்மென்
குவையிருங் கூந்தல் கொய்தல் கண்டே" (புறம்–25.)

என்பதுங் காண்க.

38. இறந்தவரை எரியிட்டுக் கொளுத்தலும், தாழியாற் கவித்துப் புதைத்தலும்.—

"நல்லோள் கணவனொடு நளியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையும்"

என்றதனால் அக்காலத்தில் இறந்தவரை எரியிட்டுக் கொளுத்தல் தமிழ்நாட்டு வழக்கு என்பது போதரும்.

"எறிபுனக் குறவன் குறைய லன்ன
கரிபுற விறகி னீம வொள்ளழல்" (புறம்-231.)

என்றும்,

"கள்ளியம் பறந்தலை யொருசிறை யல்கி
ஒள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந்தது" (புறம்-240.)

என்றும் வரும் புறப்பாட்டுக்கள் அவ்வழக்குப் பின்னும் உண்மையை வெளிப்படுத்துகின்றன.

"கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
....அன்னோற் கவிக்குங் கண்ணகன் றாழி
வனைதல் வேட்டனை யாயின்" (புறம்-228.)

என்றும்,

"வியன்மல ரகன்பொழி லீமத் தாழி
அகலி தாக வனைமோ" (புறம்-256)

என்றும்,

"கூகை கோழி யானாத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே" (புறம்-364.)

என்றும் வருதலாலும், தாழி என்பதனை உரைகாரர் பிணமிட்டுப் புதைக்கப்பட்ட கவிக்கப்பட்ட தாழி என்றும் முதுமக்கட்டாழி என்றும் விளக்குதலானும், இறந்தவர்களைத் தாழியாற் கவித்துப் புதைக்கும் வழக்கம் சங்கத்தினர் காலத்தில் உளதென்பது பெறப்படுகின்றது. அக்காலத்து அந்தியக்கிரியையை

"கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே" (புறம்-363.)

என்பதனால் அறியலாம்.

"கள்ளி போகிய களரி மருங்கின்
வெள்ளி னிறுத்த பின்றைக் கள்ளொடு
புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி
புலைய னேவப் புன்மே லமர்ந்துண்
டழல்வாய்ப் புக்க பின்னும்" (புறம்-361.)

என்பதும் இறந்தபின்பு செய்யுங் கிரியையை உணர்த்துவது காண்க.

39. பிள்ளைக்குப் பெயரிடுதல்.—ஒருவன் தன் பிள்ளைக்குத் தன் தந்தையின் பெயரை இடுவதான இக்கால வழக்கு அக்கால வழக்கேயாம். இதனாலன்றோ ஒருவனுடைய பிள்ளையின் பிள்ளைக்குப் பெயரன் என்கிற முறைப்பெயர் தமிழில் வழங்குவதாயிற்று.

"புணர்ந்தகா தலியிற் புதல்வன் றலையு
மமர்ந்த வுள்ளம் பெரிதா கின்றே
அகன்பெருஞ் சிறப்பிற் றந்தை பெயரன்
முறுவலி னின்னகை பயிற்றிச்
சிறுதே ருருட்டுந் தளர்நடை கண்டே" (ஐங்குறு-403.)

என்றும்,

"தாஅன்றன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளி பெற்ற
புதல்வன்" (கலி-75)

என்றும்,

"மேதக்க வெந்தை பெயரனையாங் கொள்வோம்" (கலி-81.)

என்றும் வருவன காண்க.

40. சிறுவர் விளையாட்டு முதலியன.—இக்காலத்தும் தூரவு குளங்களில் குதித்து மண்ணெடுத்துக் காட்டும் சிறார்களை நோக்கும்போது,

"மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்

கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண்ட கல்லா விளமை" (புறம்-243.)

என்னு மடிகள் நினைவில் வருகின்றன. முற்காலத்துச் சிறுவர்கள் குடுமி எங்ஙனம் விட்டிருந்தனர் என்னும் அதிசயம் "புல்லுளைக் குடுமிப் புதல்வன்" என்னு மடியைக் கண்டு நீங்குகின்றது. அக்காலத்துச் சிறுவர்களுக்குக் கழுத்தில் ஏதாகிலும் கட்டிவைப்பதுண்டா என்கிற ஐயத்தை

"நுண்பூண் மார்பிற் புன்றலைச் சிறுஅர்" (புறம்-373.)

"புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறார்" (புறம்-374.)

"நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்கவவன் கண்ணிதார் பூண்டு
தாலி களைந்தன்று மிலனே" (புறம்-77.)

என்னும் அடிகள் களைகின்றன. தாலி என்பது ஐம்படைத்தாலி.

"(புதல்வன்) அழக்கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியும்"

தணித்தல் இன்றும் உள்ளபடிதானே. உழவர் சிறுவர்கள்

"தெங்குபடு வியன்பழ முனையிற் றந்தையர்
குறைக்க ணெடும்போ ரேறிவிசைத் தெழுந்து
செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட முயல்" வதும்,
(புறம்-61.)

"ஊர்க் குறுமாக்க ளாடக் கலங்குந்
தாட்படு சின்னீ" ரும்,

இக்காலத்தும் நாட்டுப்புறங்களிற் காண்கின்றோம்.

41. பாலசிக்ஷை.—இக்காலத்தும் இன்னும் ஒரோவிடத்துக் காணப்படுவனவான தெருப்பள்ளிக்கூடங்கள் போன்றவைகளிற்றான் அக்காலச் சிறுவர் பாலசிக்ஷை பெற்றனர் என்பது,

"கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தால்................"

என நாலடியார் முதலியவற்றிற் கூறியிருப்பதனால் விளங்குகின்றது. "மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்" என்ற வழக்குகளும் உண்டு. கணக்காயனவான் மூலபாடஞ் சொல்லும் ஆசிரியன். பிள்ளைகளுக்கு இளமையில் வித்தியாரம்பஞ்செய்கிற வழக்கம் ஜீவக சிந்தாமணியில் "மதலைமையாடுக" என்றும், வித்தியாரம்ப வைபவம்

"அரும்பொனு மணியு முத்துங்
  காணமுங் குறுணி யாகப்
பரந்தெலாப் பிரப்பும் வைத்துப்
  பைம்பொன்செய் தவிசி னுச்சி
இருந்துபொன் னோலை செம்பொ
  னூசியா லெழுதி யேற்ப"

என்றும் கூறியிருப்பதனால் விளங்கும்.

"அகத்தியமா முனியருளா லருந்தமிழா லரிச்சுவடி
செகத்திற் ப்ரகாசமுடன் செப்பவே—மிகுத்தெனக்கு
வாரா வெழுத்தெல்லாம் வரவே வரந்தருவாய்
காராய் கணபதியே காப்பு"

என நெடுங்காலமாய் வழங்கும் அரிச்சுவடி எக்காலத்ததோ? அக்காலத்தில் அட்சராப்பியாச காலத்தில் முதலில் என்ன புஸ்தகம் வழங்கினரோ? இதுபோன்றவைகளை இப்பொழுது எவ்வாற்றானும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் கணக்காயர்களிடத்தில் சில நூல்களை மூலபாடமாக நெட்டுருப்பண்ணுவதும், மேல்வாய் கீழ்வாயிலக்கங்களைக் கற்பதும், இங்ஙனம் எழுதப் படிக்

கப் புள்ளிக்குத்தக் கற்பதுவுமே வழக்கம். பின்பு பெரிய வித்துவான்களை யடுத்துப் பெரிய நூல்களை உரையுடன் படிப்பதே யன்றி, கணக்காயரிடம் பழகியபின் ஓதலான கல்விச்சாலைகள் இருந்ததாக யாதொரு அத்தாட்சியுமில்லை. கலைகள் அவ்வத் தொழிலுக் குரியவர்களிடம் பாரம்பரியமாக வழங்கிவந்தன. அவைகள் கிரந்த ரூபமாய் எல்லாரும் அறியலாம்படி வழங்கினதாகத் தோற்றவில்லை.

B. நாகரிகம்.

42. **வர்த்தகம்** அக்காலத்தில் விசேஷித்திருந்தது. பலவேறு தேயத்தினர் காலினும் கலத்தினும் பண்டங்களைக் கொண்டுவருவதும் கொண்டுபோவதும், அப்பண்டங்களின் பொருட்டு அரசன் ஆயம் இறுப்பதும், அஃதிறுக்குமாறு பண்டங்களை எடையிட்டு முத்திரிப்பதும், முதலியன எல்லாம் தற்கால ரீதியாகவே இருந்தன.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்
அறியவும் பெரியவு நெளிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு" (பட்டினப்பாலை.)

என்றும்,

"கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலைவா லுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி" (சிலப்-கடலாடு.)

என்றும்,

"நல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
வைகறொறு மசைவின்றி
உல்குசெயக் குறைபடாது
நீரினின்று நிலத்தேறவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடை" (பட்டினப்பாலை.)

என்றும் வருவன காண்க. பலவேறு பண்டங்களை விற்பவர்கள் பலவேறு கொடிகளின் வகைகளாலே பண்ட வேறுபாட்டை விளக்குவது மரபாக இருந்தது. மயிலினைக் குறிக்கும் தோகை என்னும் செந்தமிழ்ச் சொல் ஹீப்ரு பாஷையில் மருவி வழங்கியது இன்றளவில் பைபிலில் காணப்படுவதே தமிழ்நாட்டு வர்த்தகத்தின் பெருமையை விளக்கும்.

43. **வாகனங்கள்.**—

"தேரும் யானையுங் குதிரையும் பிறவும்
ஊர்ந்தன ரியங்கலு முரிய வென்ப"

என்பதனால் அக்காலத்தில் சிறந்த செல்வவான்கள் பலிருந்தனரென்பதும், இவ்வாகனங்கள் செல்லலான வீதி முதலியன இருந்தனவென்பதும், இவ்வாகனங்களேயன்றி கோவேறுகழுதையும் சிவிகையும் கொல்லாப் பண்டி முதலியனவும் இருந்தனவென்பதும், இத்தன்மைக்குரிய பிற நாகரிகங்களும் இருந்தன என்பதும் பெறப்படும். சங்கத்தார் காலத்தில் தோர்களில் நான்கு

குதிரைகளைப் பூட்டவும் அறிந்திருந்தனர். பொருநராற்றுப்படையில்

"கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தேர்
ஊட்டுளை துயல்வர வோரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டி"

என வருவது காண்க.

44. கலத்திற் சேறல்.—

"முந்நீர் வழக்க மகடூஉவோ டில்லை"

என்பதனால் பெண்கள் கலத்திற்சேறலில்லை என்பது துணிவு. ஓதற்பொருட்டும் வேந்தன் கருமமாகவும் பொருள் தேடுமாறும் தலைவியை விட்டுப் பிரிகின்றதான பாலைத்திணையை விளக்குகின்ற இடத்தில் ஓதலுக்குரியார் முதலியோரைத் தொல்காப்பியர் கூறுகின்றனர். கூறிய சூத்திரங்களை நச்சினார்க்கினியர் கடைச்சங்கத்தினர் காலத்து இலக்கியங்களையும் மிருதிநூல் வழக்குகளையுங் கொண்டு உரை காண்கின்றமையால், "முந்நீர் வழக்க மகடூஉ வோடில்லை" என்பதை வேறாகக் கொண்டவர் "இனி இச்சூத்திரத்திற்குப் 'பொருள்வயிற் பிரிவின்கண் கலத்திற் பிரிவு தலைவியுடன் சேறலில்லை; எனவே காலிற் பிரிவு தலைவியுடன் சேறலுண்டு' என்று பொருள் கூறுவாருக்குச் சான்றோர் செய்த புலனெறி வழக்கம் இன்மை உணர்க" என்றுங் கூறினர். பொருள் எதுவாயினும், மரக்கலம் அக்காலத்து வழங்கியதும் தமிழ்நாட்டினர் மரக்கலத்திற் சேறல் உண்டென்பதும் இச்சூத்திரத்தில் எவ்விதத்தினும் பெறப்படுதல் நமக்குச் சாலும்.

45. மதுபானம் செய்வது அக்காலத்தில் பெருவழக்காக இருந்ததுபோலும். அரசரும் அரசியரும் யவனர்கள் கொணரும் சிறந்த மதுவகைகளை உண்பதும், பாணர் முதலியோரும் அதனை அரசரிடம் பருகுவதும்,

வீரர்கள் வீரபானஞ் செய்வதும், கட்கடைகள் பட்டினங்களில் கொடியிட்டிருப்பதும், சங்கச் செய்யுள்களில் பரக்கக் காணலாம். நாட்படுதலால் காரமேறி முதிர்ந்த கள்ளின் வலிமையைப் புறநானூற்றில்

"தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்"

என்றும்,

"அரவுவெகுண் டன்ன தேறல்"

என்றும் விளக்கியிருத்தலால் அக்காலத்துப் புலவரும் சிலர் அதன் சுவை யுணர்ந்தவர்போலும். பூமியில் புதைத்துவைத்தும், மூங்கிற் குழாயில் வார்த்தும், கள்ளினை முற்றச்செய்யும் உபாயமும் அறிந்திருந்தனர்.

46. நிமித்தம் பார்ப்பதும் சகுனம் பார்ப்பதும் முதலான குருட்டுப் பக்தி முற்காலத்தில் உண்டாயிருந்தது. பிற்காலத்தில் நனிநாகரிகம் பெற்ற தேசங்களிலும், இப்படிப்பட்ட பக்தி, பூர்வத்தில் இருந்ததாகவே பல தேச சரித்திரங்களாலும் அறிகிறோம். பறவை முதலியவற்றின் செய்கையும் குரல் வேறுபாடும் விண்மீன்களுள் ஓரோர் காலத்துத் தோன்றும் முறை பிறழ்வும் அப்பிராகுர்தமான தோற்றங்களும் கண்தோள் முதலியன இடம் வலந் துடித்தலும் முதலாயின காரணமாக நன்மை தீமைகள் வருமுன் உணர்வதே இந்தப் பக்தியின் நோக்கம். அரசன் நிரையடித்தற்குத் தன் படைத்தலைவரை ஏவிய வழி, அவர் அவனூரினின்றும் போய் ஒரு பாக்கத்து விட்டிருந்து, அரசனுக்கு மேல்வரும் ஆக்கத்தையறியச் சிலரை அனுப்பி நிமித்தங் கேட்பர். இதுகேட்டு நிரைகொண்டபின்னரே அரசன் வஞ்சிசூடி மண்ணசையால் மேற்செல்வன். இங்ஙனம் நிமித்தங் கேட்பதைத் தொல்காப்பியத்தில் "பாக்கத்து விரிச்சி" என உரைத்திருக்கின்றது. இதனை நச்சினார்க்கினியர் "நிரைகோ

டற்கு எழுந்தோர் போக்குவிட்ட பாக்கத்துக் கங்குலின் அல்வாய்ப்புட் கேட்டலும் நிரைமீட்டற்கு எழுந்தோர் இடைப்புலத்துப் புறம்போந்தோர் கூறியவற்றை வாய்ப்புள்ளாகக் கோடலும்'' என விளக்கியிருக்கின்றனர். ஜீவக சிந்தாமணியில் கட்டியங்காரனுடைய நிரையைக் கோடலைப்பற்றி

"மன்ன வன்னிரை வந்து கண்ணுறும்
இன்ன நாளினுற் கோடு நாமெனச்
சொன்ன வாயுளே யொருவன் புட்குரல்
முன்னங் கூறினன் முழுது ணர்வினன்''

என வேடர்க்கு ஒரு நிமித்திகன் கூறினன் என வுரைத்திருக்கின்றது.

"திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
நரைமுதியோ னின்றுரைத்த நற்சொல்—நிரையன்றி
எல்லைநீர் வையம் இறையோர்க் களிக்குமால்
வல்லைநீர் சென்மின் வழி''

என வருதலுங் கொள்க. காக்கை ஒரு வீட்டினருகிருந்து கரையின் அவ்வீட்டினர், எவரேனும் விருந்தினர் சுற்றத்தார் வருவர் என இக்காலத்தும் நம்புகின்றனர். முற்காலத்தவர்களுக்கு இந்த நிமித்தம் உளதாவது இலக்கியங்களிற் காணப்படுகின்றது. ஐங்குறுநூற்றில்,

"மறுவி றூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே''

என உடன்போகிய தலைமகள் மீடற்பொருட்டுத் தாய் காகத்திற்குப் பராய்க்கடன் உரைத்ததாக வருகின்றது.

"இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே"

எனப் பல்லி யிசைப்பதும் கண் இடந்துடித்தலும் பாலைக்கலியில் உரைத்திருப்பது காண்க. உடன்போக்கிடத்து வருங் கிளவிகளை விளக்கும்

"தன்னு மவனு மவளுஞ் சுட்டி
மன்னு நிமித்த மொழிப்பொரு டெய்வம்....
அவ்வழி யுரிய"

என்னுந் தொல்காப்பியத்தால் இந்நிமித்தங்களின் தொன்மை புலப்படும்.

"புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்" (புறம்—204.)

என்றும்,

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குவ ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே" (புறம்—124.)

என்றும், புண்ணிமித்தமும் நன்முகுத்தமுங் குறித்திருக்கின்றது.

"திசையிரு நான்குமுற்க முற்கவும் பெருமரத்
திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும்
வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவும்" (புறம்—41.)

இது உற்பாதம்.

47. **வருணபேதம் சமயபேதம் முதலியன.**—தொல்காப்பியர்க்கு நெடுங்கால முன்னரே ஆரியர் தமிழ்நாட்டில்

குடியேறியிருந்தனர் என்பது பொருளதிகாரத்தில் பல விடத்தும் துணியப்படுகின்றது. ஆரிய அந்தணர்கள் தொல்காப்பியர்க்கு முற்பட்ட இலக்கியங்களில் பாத்திரங்களாகவும் அரசர் முதலாயினோர்க்குப் பாங்கராகவும் அமைச்சராகவும் இருந்தனரென்பது வெளிப்படையாக விளங்குகின்றது.

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபி னரசர் பக்கமும்
இருமூன்று மரபி னேனோர் பக்கமும்"

என்ற வாகையால் ஆரியர்களுடைய சாதிப்பிரிவும் இங்கே அனுசரிக்கப்படுவனவாயின என்பது பெறப்படுகின்றது. ஆயினும் இங்குக் கூறிய பார்ப்பார் அந்தணர் ஐயர் எனப்படுவோர் அனைவரும் ஆரிய பிராமணரே என்று துணிந்துகொள்வதற்குப் போதிய சான்றில்லை. வைசிகன் என்ற பெயர் தவிர ஏனையவெல்லாம் தமிழ்ப் பெயரே வழக்காக வழங்கியிருக்கின்றன. ஒருபால் அந்தணர் அரசர் வணிகரும் ஒருபால் திணை நில மக்களும் நீங்கலாக, ஏனையோரை வேளாண்மாந்தரென மரபான தமிழ்ப்பெயரால் வழங்கியிருத்தலானும், மிருதிகளையொட்டி இவர்களைச் சூத்திரரென்று யாண்டும் வெளிப்படையாகக் கூறாமையானும், தமிழ்நாட்டு வணிகர் ஆரியரல்லரென்றற்கு அவர்களுடற்கூற்றுவண்ணமே இன்றளவும் சான்று பகர்தலானும், வெவ்வேறு தொழின்மரபுடையவர்களை ஆரிய வருணபேத வொப்புமை நோக்கி வேறுபடக் கூறியிருத்தல் கூடுமென்பது புலப்படுகின்றது. தமிழ்நாட்டு வணிகர் வேதமோதலும், வேளாளர் ஏனையோர்க்கு வழிபாடு செய்தலும், கடைச்சங்க இலக்கியங்களிற் பெறப்படாமையால், தொல்காப்பியர்க்கு முற்பட்டகாலத்தும் அவ்வொழுக்

சங்கள் தமிழ் நாட்டிலில்லையென்பதும் இவையெல்லாம் உரையாசிரியர்கள் தூரபிமானத்தாலும் மயக்கத்தாலும் அங்கங்கே ஒட்டவைத்தன என்பதும் அனுமானங்களாகத் தோன்றுகின்றன.

"ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன"

என்றும்,

"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"

என்றும்,

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

என்றும் வருவன தொல்காப்பியர் காலத்துப் புலனெறி வழக்கான மரபு.

"மூவரு நெஞ்சமர முற்றி யவரவர்
ஏவ லெதிர்கொண்டு மீண்டுரையான்—ஏவல்
வழுவான் வழிநின்று வண்டார் வயலுள்
உழுவா னுலகுக் குயிர்"

என வேளாண்வாகை வகுத்தார் ஐயனாரிதனாரெனின், அவர் சங்கத்தார்க்கு நெடுங்காலம் பிற்பட்டவராதலால், அவர் கூற்றைச் சுட்டிய ஆராய்ச்சி ஈண்டின்றென்க. குறிஞ்சிக்குரிய தெய்வம் முருகன் என்பதும் குறிஞ்சிக்குரிய முருகனுடைலான வெறியாட்டும் தமிழ் நாட்டிற்கே உரியதென்பதும் வெள்ளிடை விலங்கலாயினும், முல்லை நிலத்துக்கு மாயோனும் மருதத்துக்கு இந்திரனும் நெய்தலுக்கு வருணனும் தெய்வங்களாக வகைப்படுத்தியிருப்பது, தமிழ்நாட்டில் ஆரியருக்குள்ள புராதனத்துக்குப் பொருந்திய அத்தாட்சி என்பதில் ஐயமின்று. கடைச்சங்கமிருந்தகாலத்தில் சைவ வைணவ சைன பௌத்த சமயங்கள் விளங்கியிருந்ததன்றி, இங்

திரன் பலதேவன் முதலியோர்க்குக் கோயில் அமைத்திருந்ததாகவும் அறிகிறோம். பெண்கள் சிறுபருவத்தில் சந்திரனைத் தொழுவதும் மார்கழி நீராடுவதும் தை நீராடுவதும் முதலியன அக்கால இலக்கியங்களில் அங்கங்கே புலப்படுகின்றன. துர்க்கைக்கு வீரரிடும் அவிப்பலி மிகவும் பயங்கரமானது. அக்காலத்தில் பாரத ராமாயண சரித்திரங்கள் பயில வழங்கினமையும் வெளிப்படை.

48. திணைநில மக்கள்.—

"பெயரும் வினையுமென் றாயிரு வகைய
திணைதொறு மரீஇய திணைநிலப் பெயரே"

என்பதனால், பட்டினங்களிலும் பாக்கங்களிலும் வதிவோரன்றி, ஏனைத் திணை நிலங்களில் வதிவாரும் உளர்; அவர்கட்கு அவ்வத் திணை நிலப் பாங்கின்படி செய்யலான செய்கைகளும் உள என்பது தெரிகின்றது.

ஆகவே

"ஆயர் வேட்டுவ ராடூஉத் திணைப்பெய
ராவயின் வரூஉங் கிழவரு முளரே"

என்றும்,

"ஏனோர் பாங்கினு மெண்ணுங் காலை
யானா வகைய திணைநிலப் பெயரே"

என்றுங் கூறியிருத்தலால்,—முல்லைநிலத்தில் வதிவார் ஆயர், அவர் செய்தி வரகு விளைத்தல் நிரைமேய்த்தல் முதலியன என்பதும்; குறிஞ்சியில் உறைவார் வேட்டுவர், அவர் செய்தி தினை விளைத்தல் தேனழித்தல் கிழங்ககழ்தல் முதலியன என்பதும்; மருதத்தில் வாழ்வார் உழவர் கடையர், அவர் செய்தி நெல் விளைத்தல் முதலியன என்பதும்; நெய்தலில் இருப்பார் நுளையர், அவர்

செய்தி மீன்படுத்தல் உப்பு விளைத்தல் முதலியன என்பதும்; பாலையில் வதிவார் மறவர், அவர் செய்தி ஆறலைத்தல் முதலியன என்பதும் பிறவும் அறியப்படும்.

"அடியோர் பாங்கினும் வினைபல பாங்கினும்"

என்றும்,

"ஏவல் மரபி னேனோரும்"

என்றும் வருதலால் குற்றேவல் செய்வார் பிறமரபினரும் உளராயிருந்தனர் என்பதும் போதரும்.

C. யுத்தமுறைமை.

49. முற்கால அரசருடைய யுத்தமுறைமையும் தொல்காப்பியத்தால் இனிது விளங்கும். இருபெரு வேந்தர் பொருவது கருதியக்கால், ஒருவர் ஒருவர்நாட்டு வாழும் அந்தணர் முதலியோரைத் தந்நாட்டின்கண்ணே யழைத்தற்கும், அதனை யறியாத ஆவைக்கொண்டு போந்து தாம் காத்தற்குமாக, தம் படைத்தலைவரை அவற்றை ஆண்டு நின்றும் கொணர்கவென ஏவுதலே போர் தொடங்கு முறையாம்.

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன் போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலல்" (புறம்-9)

வழக்காலிதன் உண்மையறிக. இது செய்யுமாறு அனுப்பப்படுவோர் வெட்சிமாலை தாங்கலின் இச்செய்கை வெட்சி யெனப்படும். அங்ஙனங்கொண்ட நிரையினை அவற்றிற்குரிய அரசன் மீட்டுக்கொள்ள ஏவப்பட்டோர் கரந்தைமாலை சூடிவருவர். நிரைமீட்டமை கண்ட அரசன் வஞ்சிமாலை சூடி மண்ணசையால் பகைவர்மேற்

செல்வான். இங்ஙனம் பகைமேற் சேறல் வஞ்சியாம். பகையரசன் காஞ்சிமாலை தரித்து எதிர்நின்று பொருவான்; பகையரசன் தனது கோட்டை யரண்களை நொச்சிமாலை தரித்துக் காப்பன். அக்கோட்டை யரணை மண்ணசையாற் சென்றவன் உழிஞைமாலை கொண்டு சென்று முற்றுவான். அங்ஙனம் பகைவனது எயிலை வளைத்தல் உழிஞையாம். வந்த வேந்தனை மாற்று வேந்தன் எதிர்சென்று தலைமையைத் தீர்ப்பது தும்பையாம். அப்பொழுது அவன் தும்பைமாலை தரித்திருப்பான். போர்க்களத்து மிக்கோர் செருவென்றது வாகையாம்.

50. பகைமேற் செல்வார் அனுசரிக்கும் மரபுகள்.—பகைமேற் சேறற்கண், வேந்தர் தமது வாளைப் புறவீடு செய்தலும், பகைவரது வேற்றுப்புலத்தை நமக்கு அழித்துத்தருவர் இவரென்று மிக்க சோற்றை வீரர் கொள்ளும்வகை கொடுப்பதும், இருவகைப் படையாளரும் பகைப்புலத்துப் பரந்துசென்று எரியை யெடுத்துச் சுடுதலும், மேற்செல்லும் வேந்தர் தத்தம் படையாளர்க்குப் படைக்கல முதலியன கொடுத்தலும் பரிசிலர்க்களித்தலும், இருதிறத்தவரும் தமது படையாளர் வரவைப் பகைவ ரறியாதபடி பகைவர் நாட்டைக் காவல்செய்யும் காவலாளரைக் கோறலும், பிறவேந்தர் தத்தம் தானையோடு இருதிறத்தவரிற் றமக்கு நட்பானவர்க்குத் துணையாதலும், ஒரு வீரன் தனக்குக் கெட்டோடுவார் முதுகு புறத்துக் கூரிய வாளோச்சாமையாகிய தருமமும் உண்டு. மடிந்த உள்ளத்தோனையும் மகப்பெறுதோனையும் மயிர்குலைந்தோனையும் அடிபிறக்கிட்டோனையும் படையிழந்தோனையும் ஒத்தபடையெடாதோனையும் பிறவும் இத்தன்மையுடையோனையும் கொல்லாது விடுதலாகிய தருமமும் அனுசரிக்கப்பட்டுவந்தது.

51. முற்றுகை.—அக்காலத்தில் அரசர்கள் மலையர ணும் காட்டரணும் நீரரணும் இயற்கையாகவுடைய இடத்தையே தமக்கு இடமாகக்கொண்டு அகநாட்டுக் குச் சேமமாக அரிய மதிலும் இட்டுவைப்பர். அம் மதில், வஞ்சனை பலவும் வாய்ந்து, தோட்டி முள் முதலி யன பதித்த காவற்காடும் அதனுள்ளே இடங்கர் முதலி யன உள்ளுடைத்தாகிய கிடங்கும் புறஞ்சூழ்ந்து, பல் வகைப் பொறிகளும் பதணமும் மெய்ப்புழைஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து, எழுவுஞ் சீப்பு முதலியவற் றால் வழுவின்றமைந்த வாயிற்கோபுரமும் பிறவெந்திரங் களும் பொருந்த இயற்றப்பட்டதாம். முற்றுதல் செய் யச் செல்லும் சேனையானது காவற்காட்டைக் கடந்து கிடங்கின் கரையை அடைந்து அகழியிடத்துப் பூசலை மேற்கொள்ள, அகத்தோரும் புறத்தோரும் ஏணியின் மீது நின்று போர்செய்தலும், அப்பால் புறமதிலின்மீது போர்செய்தலும், பின்னர் இடைமதிலிற் போர்செய்த லும், கொண்டமதிலகத்தை விட்டுப்போகாத புறத்தோ ரும் அவரைக் கழியத் தாக்கலாற்றாத அகத்தோரும் எயிற்புறத்து அகழின் இருகரையும்பற்றி நீங்காது நின்று போர்செய்தலும், மதிற்புறத்தன்றி ஊரகத்துப் பொருதலும், அரமனைப் புரிசைமீது ஏறிநின்று போர் செய்தலும், அங்ஙனம் இகல்செய்த மதிற்கண் ஒருவர் ஒருவரைக் கொன்று அவன் முடிக்கலம் முதலியன கொண்டு முடிபுனைந்து நீராடுதலும் ஆகிய இவை உழி ஞையின் மரபாம். மைந்து பொருளாகவந்த வேந்த னைச் சென்றுதலையழிக்குந் தும்பையன்றி, வெட்சிப் புறத்துத் தும்பையும் வஞ்சிப்புறத்துத் தும்பையும், உழிஞைப்புறத்துத் தும்பையும் என வேறுமுண்டு. [நிரைகொள்ளப்பட்டோன் பொருகளங்குறித்துப் போர்செய்தலும் அவன் களங்குறித்தது பொழுது நிரை

கொண்டாலும் களங்குறித்துப் போர்செய்தலும் வெட்சிப் புறத்துத் தும்பையாம். வஞ்சிப் புறத்துத் தும்பையாவது வஞ்சியுள் விழுப்புண்பட்ட வீரரை நோக்கி வேந்தற்குப் பொருமை நிகழ்ந்து துறக்கம் வேண்டுழி நிகழ்ந்த தும்பையாம்.] உழிஞைப் புறத்துத் தும்பையாவது முற்றப்பட்டோனை முற்றுவிடுத்தற்கு வேறோர் வேந்தன் வந்துழி அவன் புறம்போந்து களங்குறித்துப் போர்செய்யக் கருதலும் அவன் களங்குறித்துழிப் புறத்தோனுங் களங்குறித்துப் போர்செய்யக் கருதலுமாம்.

52. **வெற்றி பெற்றவர் செய்கை.**—வேளாண்மாக்கள் விளையுட் காலத்து நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப் போர் அழித்து அதரி திரித்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட்பலி கொடுத்துப் பின்னர்ப் பரிசிலர் முகந்துகொள்ள வரிசையின் அளிக்குமாறுபோல, வாகைமிலைந்த அரசன் நாற்படையையுங் கொன்று களத்திற் குவித்து எருதுகளிருக வாண்மடலோச்சி அதரி திரித்துப் பிணக்குவையை நிணச்சேற்றோடு உதிரப்பேருலைக்கண் ஏற்றி ஈனுவெண்மான் இடந்துழந்தட்ட கூழ்ப்பலியைப் பலிகொடுத்து எஞ்சிநின்ற யானை குதிரைகளையும் ஆண்டுப்பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகந்துகொள்ளக்கொடுப்பதும், பகைவனுக்கு உதவியாகவந்த அரசர் பலரையும் வென்ற வெற்றிக் களிப்பாலே தேர்த்தட்டிலே நின்று போர்த்தலைவரோடு கைபிணைத்துக் குரவையாடுதலும் முதலியனவும் உண்டு. தோல்வியடைந்த பகைவனுடைய அரண்களை அழித்து, நகரமாயிருந்த இடத்தில் கழுதையைப் பூட்டி வரகு கொள் முதலியவற்றை வித்தி, வெற்றியடைந்தவன் தன் பராக்கிரமத்தைக் காட்டுவதுண்டு.

"உருகெழு மன்ன ராரெயில் கடந்த
நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்
தணங்குடை மரபி னிருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைக லுழவ வாழிய" (புறம்-392.)

என வருவது காண்க. இதனோடு பயிர்களை யழித்தல் தனது யானையைப் பகையரசனுடைய நீர்நிலையில் கழுவுதல் முதலிய செய்கைகளும் செய்வதை

"கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்
புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்
தேர்வழங் கினைநின் றெவ்வர் தேஎத்துத்
துளங்கியலாற் பணையெருத்திற்
பாவடியாற் செறனோக்கி
னொளிறுமருப்பிற் களிறவர
காப்புடைய கயம்படியினை" (புறம்-15.)

என்பதனு லுணரலாம்.

53. இதுவுமது.—இன்னும் பகைவருடைய கிரீடத்தை யழித்து அதனைக் கழலாகச் செய்வித்து அணிந்து கொள்ளுதலும், பகைவருடைய யானைகளின் நெற்றிப் பட்டப் பொன்னைத் தாமரையாகச் செய்வித்துப் பாணர்க்குச் சூட்டுதலும், பகைவருடைய மனைமரங்களை வெட்டி விறகாக எரித்தலும், பகைவர் பொருள்களில் தமக்கு வேண்டுவன கொண்டு பிறவற்றை வீரருக்கும் பரிசிலருக்கும் வரையாது கொடுத்தலும், பகையரசர் கொடுத்த திறைகளைப் பரிசிலர்க்குக் கொடுத்தலும் முதலியனவும் வெற்றியாளருடைய செய்கைகளா மென்பது புறநானூறு முதலியவற்றால் விளங்குகின்றது.

54. **நடுகல்.** — பராக்கிரமத்துடனே பொருதுபட்ட போர்வீரனது ஞாபகசின்னமாகக் கல்நடுதல் என்னும் ஒரு ஐதிகம் அனுசரிப்பதுண்டு. காட்டில் நீண்ட கல்லிடத்துக் கல்லைக் கண்டு பட்டவனுக்குத் தக்கது இதுவென்று துதித்துக் கழல்வீரர் அக்கல்லினைக் கைக் கொண்டு வந்து சுத்திபண்ணிப் பின் நறுநாற்ற முடைய னவற்றைக் கொண்டு மஞ்சனமாட்டி நீர்ப்படுத்துவர். பின்பு மடையும் மலரும் மதுவும் முதலியன கொடுத் துப் பீலித் தொடையலும் மாலையும் நாற்றிப் பல்லியம் இயம்ப விழவுச்செய்து கல்லில் வீரனுடைய பெயரும் பீடும் எழுதி ஓரிடத்தில் நடுவர். அங்ஙனம் நாட்டிய கல்லிற்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைச் சிறப் புக்களும் படைத்து, இக்கல் நெடிதுவாழ்க, இதன் கண் அவ்வீரன் நின்று நிலவுக, என வாழ்த்துவர்.

55. **வாயுறை வாழ்த்து & செவியறிவுறூஉ.**— இன்னும் அக்காலத்தில் உலக நிலையாமை முதலிய உண்மைகளை விளக்கி வீட்டுநெறி காட்டும் சான்றோர்கள் இருந்த னர். அங்ஙனம் அவர்கள் விளக்குவது காஞ்சித்திணை யாமாறு,

> "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
> நில்லா வுலகம் புல்லிய நெறித்தே"

என்னுஞ் சூத்திரத்தா லினிது விளங்கும். அங்ஙனம் விளக்குமிடத்தும், தாம் கூறும் பொருளானது, முற்பரு வத்துக் கைத்தும் பிற்பருவத்து உறுதிபயக்கும் வேம் புங் கடுவும் போல வெய்யவாய் இன்சொல்லினைத் தடை யின்றிப் பிற்பயக்குமெனக் கருதி, பாதுகாத்துக் கிளக் குங் கிளப்பினல் அறிவுறுத்துவர் அச்சான்றோர். பா துகாத்துக் கிளத்தலாவது, கேட்போனுடைய ~~சிறப்~~ பைக் கூறிவழுத்தி அப்பால் அவ்விழுமிய பொருளை

அறிவுறுத்துவர். நன்மொழி கூறி மருந்து கொடுத்து ஒருவனுடைய உடற்பிணியைப் போக்குவது போல, இங்ஙனம் சிறப்புக் கூறி வழுத்தி ஒருவற்குப் பயன் படச் சொல்லுதலால் அக்கூற்று வாயுறை வாழ்த்து எனப்படும். வாயுறை என்பது சொன்மருந்து என்ப தாம். அவ் வீட்டுநெறிப் படுதற்கான உபாயம் பெரி யோரைத் துணைக்கொண்டு அவர் நடுவிருந்து அவரை வழிபட்டு நடத்தலாதலால் அதனையும் உபதேசிப்பது வழக்கம். வாய்மருந்து போல, இதுவும் செவிமருந் தாக உபதேசிப்பதனுல் இது செவியுறை என்றும் செவி யறிவுறூஉ என்றும் வழங்கும்.

"செவியுறைதானே
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே."

II.

56. பழமொழிகள்.—தமிழ்ப்பாஷையின் புராதனத் தையும் தமிழர்களுடைய புராதன நாகரிக நிலைமையை யும் விளக்குவதில் தமிழ்ப் பழமொழிகள் குன்றின்மே லிட்ட விளக்குப்போல் சிறந்த சாதன மாகின்றன. பழமொழி—முதுமொழி—மூதுரை என்பன ஒருபொருட் கிளவி. தொல்காப்பியத்தில்

"நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடை மையு
மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி யென்ப"

என முதுமொழி யிலக்கணங் கூறியிருப்பது காண்க. இதன் பொருள் 'கூரிதாய்ச் சுருங்கி விழுமிதாய் எளி தாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளொன்றனை முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது

முதுமொழி' என்பதாம். பழமொழிகள் பிரமாணமாகக் கொள்ளப்படுவதை "பஹுஜன வாக்யம் கர்த்தவ்யம்" என்ற ஸமஸ்கிருத பழமொழியா லுணர்க.

57. அவ்வக்காலப் பழமொழிகள். — இக்காலத்தில் வழங்கும் பழமொழிகள் பதினாயிரத்துக்குக் குறைவில்லை. இவை யனைத்துமே பன்னெடுங்காலமாக வழங்குவன வல்ல. கால வேறுபாட்டால் பழையனவாய் வழக்காறற்றுக் கழிவனவும் பல; புதியனவாய் வழக்காறுற்றுப் புகுவனவும் பல. "மயிலாப்பூர் ஏரி உடைத்துக் கொண்டுபோகிறதென்றால், வருகிற கம்பிடிக்கு ஆகட்டும்" என்பதும், "அவன் கெட்டான் குடியன், எனக்கிரண்டு டிராம் வாரு" என்பதும், "தண்டசோற்றுக்காரன் குண்டுபோட்டால் வருவான்" என்பதும், ஐரோப்பிய துரைத்தனத்தில் ஏற்பட்டவை. "பணமிருந்தால் பாக்ஷா, பணமில்லாவிட்டால் பக்கிரி," "மக்காவுக்குப் போய் கொக்குப் பிடித்ததுபோல," "நபாபத்தனே யேழை, புலியத்தனே சாது," "துலுக்கத் தெருவில் தேவாரம் ஓதினது போல," "நிஜாமலி தண்டில் நிஜார்க்காரனைக் கண்டாயா" என்றாற்போன்றவை முகம்மதிய வரசாட்சியில் உண்டானவை. "கடன் காரனை வைத்த கழுவுண்டா," "கழுவுக்கேற்ற கோமுட்டி," "விலங்கைவிட்டுத் தொழுவில் மாட்டிக்கொண்டது போல," "தலைக்கு மிஞ்சின ஆக்கினையில்லை, கோவணத்துக்கு மிஞ்சின தரித்திரமில்லை" என வழங்குவன தமிழரசர் காலத்தில் குற்றவாளிகளுக்குள்ள தண்டனைகளை விளக்குகின்றன. "வவ்விடக் கவ்வாயிற்று," "மவ்விடப் பவ்வாயிற்று" என்ற பழமொழிகள் அச்செழுத்துக்கள் ஏற்பட்டபிறகு வழக்காறற்றன. கண்ணாடி வெகுவாய்ப் பரவுதற்குமுன் "தனக்கில்லாத அழகு தண்ணீர்ப் பானையைப் பார்த்தால் தீருமா" என

வழங்கியது. இப்போது "முகக்கோணலுக்குக் கண்ணாடி பார்த்தால் தீருமா" என்பது வழங்குவதாயிற்று. ஆகவே தமிழர்களுடைய புராதனத்தை அறிய நெடுங்காலமுன்னர் வழங்கிய பழமொழிகளை ஆராயவேண்டும். அச்சுவித்தை இங்கே பரவுதலானபின் சில பழமொழித் திரட்டுகள் அச்சிடப்பட்டன. பழமொழிகளை உதகரிக்கும் தண்டலையார் சதகம், கோவிந்த சதகம் முதலிய நூல்கள் உண்டாகி நெடுங்கால மாகவில்லை. கம்பராமாயணம் முதலியவற்றில் உதகரித்திருக்கும் பழமொழிகள் சிற்சிலவே. கடைச்சங்கத்தார் காலத்தில் நாலடி முதலியவற்றில் மிகச் சில முதுரைகளே ஏறியிருக்கின்றன. முன்றுறையரையனார் இயற்றிய பழமொழி ஒன்றுமே கடைச்சங்கத்தார் காலவரையில் வழங்கிய பழமொழிகளில் நானூற்றை அடக்கியிருப்பது.

'பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறுங்—கொண்டினிதா
முன்றுறை மன்னவ னான்கடியுஞ் செய்தமைத்த
இன்றுறை வெண்பா விவை"

என்ற அந்நூற் சிறப்புப்பாயிரத்தில் 'பண்டைப் பழமொழி' என வருவதனால், அந்நானூறும் நெடுங்கால வழக்குடையன வென்பது போதரும். ஆகவே அவைகளை ஒரு கூறு ஆராய்ந்து பார்ப்போம்.

58. **பண்டைப் பழமொழி நானூற்றில் இன்றளவும் வழங்குவன.** — "குரங்கினுள் நன்முகத்த வில்," "மச்சேற்றி யேணிகளைவு" (ஏறவிட்டு ஏணியை வாங்குதல்), "பனியாற் குளநிறைதலில்," "பாம்பறியும் பாம்பினகால்," "நிறைகுட நீர் துளும்ப வில்," "பசி பெரிதாயினும் புன்மேயா தாகும் புலி," "கொற்சேரி துன்னூசி விற்றறிவா ரில்," "குலவிச்சை கல்லாமற் பாகம் படும்" (குலவித்தை கற்றுப்பாதி கல்லாமற்பாதி), "உரையார்

இழித்தக்க காணிற் கனு," "சான்றோ ரவைப்படிற் சாவாதாம் பாம்பு" (பத்திலே விழுந்த பாம்புஞ் சாவாது), "அயிலாலே போழ்ப வயில்" (அரத்தை அரங் கொண்டும் வயிரத்தை வயிரங்கொண்டும் அறுக்கவேண்டும்), "ஆலென்னிற் பூலென்னு மாறு" (ஆலேபூலே என்று அலப்பிக்கொண்டிருக்கிறது), "இளைதென்று பாம்பிகழ்வா ரில்" (சின்ன பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி), "சிறு குரங்கின் கையாற் றுழா" (குரங்கு தன் குட்டியின் கையைக்கொண்டு பதம் பார்க்கிறது போல), "முள்ளினால் முட்களையு மாறு," "கற்கிள்ளிக் கையுய்ந்தாரில்," "இருதலைக் கொள்ளி," "கானகத் துக்கநிலா," "வாங்கியிருந்து துளை யெண்ணார் அப்பந் தின்பார்" (வடையைத் தின்னச் சொன்னார்களா துளையை எண்ணச் சொன்னார்களா), "திங்களை நாய் குரைத் தற்று," "ஆகாதே உண்டது நீலம் பிறிது" (கறுப்பு வெளுப்பாகாது கசப்பு இனிப்பாகாது), "உள்ளம் படர்ந்ததே கூறு முகம்" (அகத்தி லழகு முகத்தில் தெரியும்), "எழுப்புபவோ துஞ்சு புலியைத் துயில்" (தூங்குகிற புலியைத் தட்டி யெழுப்புவா னேன்), "இளையானேயாயினும் மூத்தானே யாடு மகன்" (இளைஞன் ஆனாலும் ஆடுவான் மூப்பு), "வித்தின்றிச் சம்பிரத மில்" (வித்தில்லாச் சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை. வித்தில்லாமல் விளைவுண்டாகுமா), "உமிக்குற்றிக் கைவருந்து மாறு" (உமியைக் குத்திக் கை சலித்தது போல), "குரங்கின் கைக் கொள்ளி கொடுத்துவிடல்," "விரையிற் கருமஞ் சிதையு மிடராய்விடும்" (பதறிச் செய்கிற காரியம் சிதறிக் கெட்டுப்போகும்), "தனிமரங் காடாத லில்," "தமக்கு மருத்துவர் தாம்" (தன் நோய்க்குத் தானே மருந்து)" "ஓடுக வூரோடு மாறு," "ஆயிரங் காக்கைக் கோர் கல்," "முதல் இல்லார்க்கு ஊதியமில்லை," "ஞாயிற்

றைக் கைமறைப்பா ரில்" (சூரியனைக் கையால் மறைத்தது போல), "இறைத்தோறும் ஊறுங் கிணறு" (இறைத்த கிணறு ஊறும்), "கொடுத்தேழை யாயினாரில்" (கொடுத்தால் குறைவு வருமோ), "நுணலுந் தன் வாயாற் கெடும்" (தவளை தன் வாயாற் கெடும்), "தாய் மிதிக்க வாகா முடம்" (கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா), "நாய் காணிற் கற்காணு வாறு" (நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்), "வேண்டயிரை விட்டு வரால் வாங்குபவர்." (கெண்டையைப் போட்டு வராலை இழுக்கிறது.)

59. அவற்றால் அறியலான விஷயங்கள். — இன்றளவும் வழங்கிவருகின்ற இவை ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முன்னரே பண்டைப் பழமொழியானால் இவைகளின் தொன்மையைக் கணக்கிடுதல் முடியாது. அத்தொல்லைநாளில் தமிழர்கள், ஊர்களிற்கூடி வசிக்கவும், ஊரினரோ டொத்து நடக்கவும், மச்சுக் கட்டவும், கிணறுதோண்டி யிறைக்கவும், குடம் வனையவும், அரமுதலிய இருப்புக்கருவிகள் செய்யவும் அறிந்திருந்தனர். தொழில்கள் பாரம் பரியமாய்ச் செய்யப்பட்டுவந்தன. ஆகவே தொழில்களை வருந்திக் கற்கவேண்டிய நிமித்தமில்லாதிருந்தது. மனக்குறிப்பை முகக்குறிப்பா லறிவதும், ஏழைகளுக்குக் கொடுப்பதனால் நன்மை யுண்டாவதும், நோய்களுக்கு மருந்து கொடுப்பதும், முதற்பணம் வைத்து ஊதியம் பெறுவதுமான பல சூக்ஷமங்களும், இவர்களுக்குத் தெரிந்திருந்தன.

ஏழைகளுக்குக் கொடுப்பதனால் உண்டாகும் நன்மை, யை "நல்லறஞ்செய்வது செய்யாது கேள்" என்றும் கூறினர். "அறஞ்செய அல்லவை நீங்கிவிடும்" என்பதும் அவர்கள்உணர்ந்தபடி. "வருந்தாதார் வாழ்க்கை திருந்துதலின்று" என முயற்சியால் எய்தும் நன்மையும் அவர்

களுக்கு விளங்கியிருந்தது. பிறர்க்குச் செய்யலான கடமைகளிலும் தவருர். "கடங்கொண்டுஞ் செய்வார் கடன்." ஆடைகள் நெய்து தரிப்பதும் அணிகலன் செய்து அணிவதும் சகசமே யாயினும், ஆடையின் சிறப்பை "அணியெல்லா மாடையின் பின்" எனக் கொண்டிருந்தனர். "கற்றலிற் கேட்டலே" அவர்களுக்கு நன்ருக இருந்தது. "கடல்போயும் ஒன்றிரண்டாம் வாணிகமில்" என வர்த்தகத்தின் மர்மத்தையும் சூக்ஷமித் தறிந்திருந்தனர். பண்டங்களைப் பாழ்படுத்தாமல் "இல்லையே ஒன்றுக் குதவாத ஒன்று" என்று கொண்டு சேமித்து வைப்பர்.

நட்பின் திறத்தில் எச்சரிக்கையாகவே இருந்தவர்கள். "பின்னின்னு பேதையார் நட்பு" ஆதலின் அவரொடு நட்புக் கொள்ளார். "இன்னுதே பேயோடானும் பிரிவு" ஆகையால், "நட்டரு ணுதலே நன்று" என்று கொண்டனர். அங்ஙனம் நட்பருமைக் கான உபாயமும் "ஒருவர் பொறை யிருவர் நட்பு" என்பதே. "பழம்பகை நட்பாத லில்" லாமையும் அவர்களுக்கு அனுபவ சித்தம்.

கீழ்மக்கள் இரகசியங்களை வெளிவிடுவராதலால் "சான்ருேர் கயவர்க் குரையார்மறை." கண்ணுற் காணுததைக் கண்டதாக உரையார். "கண்ணிற் கண்டதூஉ மெண்ணிச் சொலல்" என்பதே அவர்களுக்கு விதி. "முனியார் முன்னிய தெய்தாமையில்" ஆகையால் கோபங் காரியசித்திக்கு விரோதமென்பது அவர்கட்குப் பழம்பாடம். "நுகத்துப் பகலாணிபோன்று" நடுவுநிலைமையுடையவர். "தனக்கின்னு வின்னு பிறர்க்கு" ஆதலால் எவர்க்குந் தீங்கிழையார். "ஒழுக்கத்தின் மிக்க வுயர்வில்லை" என்பதறிந்த அவர்களுக்குத் "தம்மை யுடைமை தலைமையாக" இருந்தது.

ஆரியர்கள் தமிழ்நாட்டில் மிக நெடுங்கால முன்னரே குடியேறினவர்கள் என்பதற்கும் சில பழமொழிகள் அத்தாட்சி யாகின்றன. "வித்தின்றிச் சம்பிரதமில்" என்பதில் வித் என்பதும் சம்பிரதம் என்பதும் வடமொழிகள். "மறைப்பினு மாகாதே தஞ்சாதி மிக்கு விடும்." சாதி என்பது ஜாதி என்னும் வடமொழித் தற்பவம் "குலவிச்சை கல்லாமற் பாகம் படும்." இதில் குலம், விச்சை, பாகம் என்பன மூன்றும் வடமொழி. "பரிசழிந்தாரோடு தேவரு மாற்ற விலர்" என்பதில் தேவர் வடசொல். இவை நீங்கலாக, பழமொழி நானூற்றிலும் ஆறேழின் மிக்க வடசொல் இல்லை. தமிழ்நாட்டிற் பார்ப்பார் அக்காலத்திலும் மாமிசம் புசிக்காமை "நோய்கொண்டாற் பார்ப்பாருந் தின்பருடம்பு" என்பதனால் விளங்கும். ஏனையர் மாமிச முண்பது பெரும்பான்மை போலும்.

மதசம்பந்தமான பழமொழிகள் ஈண்டு பலவாய்ப் புலப்படவில்லை. "துறவா வுடம்பினா லென்ன பயன்" எனத் துறவறத்தின் ஏற்றமும், "நசை கொன்றான் செல்லுலக மில்" என வீடும், "விரகர்கட் கெல்லாம் வெறுப்பனவே செய்யும் நரகர்கட் கில்லையோ நஞ்சு" என நரகும் குறித்திருக்கின்றன. நரகத்தைத் தமிழர் அறியார். ஆரியரிடங் கற்ற புதுப்பாடங்களில் இஃதொன்று. ஊழ்வினையில் மிக்க பற்றுடையவர்கள் என்பதுமாத்திரம் உண்மை. "உறற்பால தீண்டா விடுதலரிது." "ஆகாதார்க் காகுவதில்." "அறிவினையூழே யடும்." "முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு பிற்பகல் கண்டு விடும்." "செல்வம் தொகற்பால போழ்தேதொகும்."

இதுகாறும் எடுத்துக் காட்டினவை தமிழர்களுடைய புராதன நாகரிக நிலைமையை நன்கு விளக்குவனவே. இவை சால்கிலவாயின், "செய்தானை யொவ்வாத பாவை

யோ வில்,'' ''உலகின்கண் இல்லதற் கில்லை பெயர்'' என்பன கொண்டமைக.

III.

60. நிகண்டு முதலிய ஆராய்ச்சியால் போதரும் விஷயங்கள்.—ஒரு தேசத்தில் வசிப்பவருடைய பூர்வோத்தரத்தை ஆராய்ந்தறிவதற்கு அவர்கள் பேசும் பாஷையில் வழங்கும் நிகண்டு அகராதி முதலானவைகளை ஆராய்ச்சி செய்வதும் ஒரு சாதனமாகும். தமிழ்நிகண்டு முதலானவைகளை ஆராய்கையில் பின்வருகிற விஷயங்கள் தேற்றமாகும். விஷ்ணு சிவன் பிரமன் இந்திரன் முதலிய ஆரிய தேவதைகளின் பெயர்கள் பற்பலவாக வடமொழிப் பெயர்களாலும் அவற்றிற் கியைய மொழிபெயர்த்துக்கொண்ட தமிழ்மொழிப் பெயர்களாலும் வழங்குகின்றன. பரம்பொருள் தமிழில் கடவுள் — இறைவன் — ஐயன் — ஆண்டவன் — முதல்வன் என்றாற்போன்ற சிற்சில பெயர்களாலே வழங்கப்பெறும். காட்டேறி—பேய்—பூவாடைக்காரி — முருகன் என்பன சில்லரைத் தெய்வங்களாக வணங்கப்பட்டுவந்தன. கும்பிடுதல் — வணங்குதல் — தொழுதல் — போற்றுதல் — திருவிழா என்பன தவிர பூஜை—ஆராதனை — நிவேதனம் — உற்சவம் — அபிஷேகம் — பலி என்பன வெல்லாம் வடசொல்லே. பிராணன்—ஆத்மா என்பன உயிர்—ஆவி என்பனவே. புரோஹிதர் — அர்ச்சகர் — விக்கிரஹங்கள் இல்லை.

மனமும் புத்தியும் விவேகமும் என்பன அகமும் உள்ளமும் அறிவுமே. இருதயம் மனசாக்ஷி என்பனநெஞ்சே. சிந்தனையாவது எண்ணம். ஞாபகமாவது நினைவு. இந்திரியங்களும் விஷயங்களும் பொறியும் புலனுமாம். நெடுங்கணக்கும் சுவடியும் உண்டு. சாஸ்திரங்கள் இல்லை. லக்ஷண லக்ஷியங்களுக்குத் தனித்தனிப் பெயர்கள் இல்லை.

ஜாதி குலமுதலிய பிரிவுக ளில்லையாயினும் தொழில்
வேறுபாடுள்ள குடிக ளுண்டு. மன்னன் – வேந்தன் –
இறை எனப் பரியாய நாமங்க ளுள்ள கோன் உண்டு.
அவன் வசிக்கு மிடம் அரண்மனை. படை குடி கூழ்
அமைச்சு நட்பு அரண் என்னும் ஷடங்கங்களில் பண்டை
நாளில் அமைச்சனென மந்திரி யில்லை. வில் – அம்பு –
வேல் – ஈட்டி – கத்தி முதலிய படைக்கலங்க ளுண்டு.
குப்பம் – பாக்கம் – ஊர் – பட்டினம் முதலியன உண்டு.
கிராமம் நகரம் என்பன இல்லை. தோணி–படகு–தெப்
பம் – கட்டுமரம் முதலியன உண்டு. நோய்களுக்கு மருந்
துண்டு: வைத்திய சாஸ்திரமில்லை. இரும்பு – வெள்ளி
பொன் முதலிய உலோகங்களை யறிந்து கருவிகளும் அணி
களும் செய்தனர். நவரத்தினங்களில்லை. புதனும் சனியும்
அவர்களறியாத கிரகங்கள். சிற்பம் ஜோசியம் ககோள
சாஸ்திரம் தத்துவசாஸ்திரம் ஞானசாஸ்திரம் முதலி
யன அறியார். நூல் நூற்றல் துணிநெய்தல் சாயந்
தோய்த்தல் என்பன அவர்களுக்குத் தெரிந்தனவே.
பயிரிடுதலும் படையெடுத்தலும் சகசம். ஆகவே தமி
ழர்கள் சுகவாழ்க்கைக் கின்றியமையாத சௌகரியங்க
ளும் நாகரீக வளர்ச்சிக்கான ஆதாரங்களும் ஆரியர்
ஈண்டு வருமுன்னரே பெற்றிருந்தனர் என்பதில் ஐயஞ்
சிறிது மில்லை. இங்கே மித்துரு பாந்தத்துவம் கொண்
டாடிக் குடியேறிய ஆரியர்கள், தமிழர்களுக்குச் சில
கற்றுக்கொடுத்தும், அவர்களிடத்திற் சில கற்றும்,
தமிழ்ப் பாஷையே பேசுவாராகி, மதசம்பந்தத்தின்
மிக்கவர்களாய்த் தலைமை வகித்துக்கொண்டனர்.*

---

* [From the evidence of the words in use amongst the early Tamilians, we learn the following items of information. They had 'kings,' who dwelt in 'strong houses,' and ruled over small 'districts of country.' They had 'minstrels,' who recited 'songs' at 'festivals,' and they seem to have had alphabetical 'characters' written with a

IV.

61. சாசன வாராய்ச்சியால் போதரும் விஷயங்கள்.—இந்தியாவில் சாசனங்கள் அசோக மகாராசன் காலத்தில் முதன்முதல் உண்டாயின. தமிழ்நாட்டில் உள்ள

---

style on palmyra leaves. A bundle of those leaves was called 'a book;' they were without hereditary 'priests' and 'idols,' and appear to have had no idea of 'heaven' or 'hell,' of the 'soul' or 'sin;' but they acknowledged the existence of God, whom they called *ko*, or king—a realistic title little known to orthodox Hinduism. They erected to his honor a 'temple,' which they called *Kô-il*, God's-house; but I cannot find any trace of the nature of the 'worship' which they offered to him. They had 'laws' and 'customs,' but no lawyers or judges. Marriage existed among them. They were acquainted with the ordinary metals, with the exception of 'lead,' 'tin,' and 'zinc;' with the planets which were ordinarily known to the ancients, with the exception 'Mercury' and 'Saturn.' They had numerals up to a hundred,—some of them to a thousand; but were ignorant of the higher denominations, a 'lakh,' and a 'crore.' They had 'medicines,' but no 'medical science,' and no 'doctors;' 'hamlets' and 'towns,' but no 'cities;' 'canoes,' 'boats,' and even 'ships' (small 'decked' coasting vessels), but no foreign 'commerce;' no acquaintance with any people beyond sea, except in Ceylon, which was then, perhaps, accessible on foot at low water; and no word expressive of the geographical idea of 'island' or 'continent.' They were well acquainted with 'agriculture' and delighted in 'war.' They were armed with 'bows' and 'arrows,' with 'spears' and 'swords.' All the ordinary or necessary arts of life, including 'spinning,' 'weaving,' and 'dyeing,' existed amongst them. They excelled in 'pottery,' as their places of sepulchre show, but were unacquainted with the arts of the higher class. They had no acquaintance with 'sculpture' or 'architecture;' with 'astronomy,' or even 'astrology'; and were ignorant, not only of every branch of 'philosophy', but even of 'grammar'. Their undeveloped intellectual condition is especially apparent in words relating to the operations of the mind. Their only words for the 'mind' were the 'diaphragm' (the φρῆν of the early Greeks), and he 'inner parts' or 'interior'. They had a word for 'thought', but no word distinct from this for 'memory', 'judgment', or 'conscience'; and no word for 'will'. To express 'the will' they would have been obliged to describe it as 'that which the inner part says, I am going to do so and so'.—*Caldwell.*]

சாசனங்களில் இப்பொழுது கிடைப்பனவற்றில் ஆயிரத் திருநூறு வருஷங்களுக்கு முற்பட்டன வில்லை. இவை கள் தானபத்திரங்க ளாகையால், இவைகளில் தானமா கக் கொடுக்கப்பட்ட நிலங்களின் அளவு முதலியனவும் ஆபரணங்கள் முதலியவற்றின் தன்மை நிறை முதலிய விவரமும் அறியலாம். காலவரையறையும் குறித்திருத் தலால், அவ்வச் சாசனத்தில் குறித்திருக்கும் அரசன் ஏறக்குறைய இவ்வளவு காலத்துக்கு முற்பட்டவன் என் றறிந்து, இறந்தகால சரித்திரத்தை நாம் ஒருவாறு எட் டிப்பார்க்க இடம் உண்டாகின்றது. இவ்விதமாகத்தான் இப்பொழுது குலோத்துங்க சோழன் முதலான சிலரு டைய காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அதனுல் கம்பர் முதலான சில கவிராயர்களுடைய காலமும் சற் றேறக்குறைய வரையறுக்கப் பட்டிருக்கின்றது. இங்கே நம்முடைய ஆராய்ச்சிக்குச் சாத்திய மாவதெல்லாம் அச் சாசனங்களா லறியலான பொன்னிலக்கம் கீழ்வாயி லக்கம் முதலியவற்றின் தொல்லைச் சிறப்பேயாம். இரா ஜேந்திர சோழன் காலத்துச் சிலாசாசன மொன்றில் இடையில்,

"........தாம் எழுந்தருளுவித்த திருமேனிகளுக்குக் கொடுத்த பொன் ஆடவல்லான் என்னும் குடிஞைக்கல்லால் நிறையெடுத்தும் இரத்தினங்கள் சரடும் சட்டமும் செப்பாணிகளும் அரக்கும் பிஞ்சும் நீக்கி நிறையுள்ளன நிறையெடுத்தும் அரக்கும் பிஞ்சுங்கூட இரத்தி னங்கட்டின வெறு நிறையறிய ஒண்ணுதன அரக்கும் பிஞ்சும் உட்ப டத் தக்ஷிண மேருவிடங்கன் என்னும் காசுக்கல்லால் நிறையெடுத்து.." என்றும், "....இந்நாட்டுச் செம்புறை கண்டத்து சிறு செம்புறை அளந்தபடி நிலம் ஆறரையே மும்மாவரை முந்திரிகைக்கீழ் அரையே நான்குமா முக்காணி அரைக்காணி முந்திரிகையிலும் ஊரிருக்கையும் கொட்டகாரமும் மாதேவரிருந்த திடலும் கண்ணன் வாய் நின்றும் இவ்வூர் நிலத்தாரே குறங்கறுத்துப் புறவூர்க்கு நீர்பாயும் வாய்க்காலும் வெள்ளான் சுடுகாடும் கண்மான சேரியும் பறைச்சேரியும் பறைச்சுடு

காடும் ஆக இறையிலி நீங்கு நிலம் ஏழுமாகாணிக் கீழ் ஏழுமாவரைக் காணி முந்திரிகைக் கீழ் நான்குமா நீக்கி நிலம் ஆறே அறுமாகாணி முந்திரிகை கீழ் முக்காலே ஒரு மாவினால் இறைகட்டின காணிக்க டன்............"

என்றும் வருவன காண்க. இதனால் முன்னாளில் தமிழர்கள் அனுசரித்துவந்த கீழ்வாயிலக்கமானது இங்கிலீஷில் இக்காலத்து வழங்கும் பின்னம் தசாம்ச பின்னங்களைக் காட்டிலும் மயிரிழை தவறாமல் சரியாகக் கணக்கிடக் கூடிய சிறப்பினதென்பது தேற்றம்.

V.

62. **வர்த்தக சம்பந்தமான வரலாறுகளால் அறியப்பட்டவை. யவனர்.**—முற்காலத்தில் தமிழ் நாட்டுடன் வர்த்தக சம்பந்தமுள்ளவர்களுள் யவனர்களைச் சங்க விலக்கியங்களில் பலவிடத்துக் குறித்திருப்பதைக் காணலாம். யவனர் என்பார் கிரேக்கர். அப்பெயர் அவர்கள் பாஷையில் (ஐயோனீஸ்) ஐயோனியர் என வழங்கும். பழைய வடநூல்களிலும் இவர்கள் யவனர் என்றே வழங்கப் பெறுவர். பழைய தமிழிலக்கியங்களில் கிரேக்கரையும் ரோமரையும் பொதுவாக யவனர் என வழங்குவது மரபாக இருந்தது. அக்காலத்தில் ரோமர் உச்சநிலை உற்றிருந்தனர். ரோமரால் வெற்றி கொள்ளப்பட்ட எகிப்து தேசவாசிகளான கிரேக்கர்கள் தங்கள் மரக்கலங்களில் சாராயம்—பித்தளை—ஈயம்—கண்ணாடி முதலியன கொண்டு வந்து இந்தியாவில் விற்பதும், மிளகு—தந்தம்—முத்து—இரத்தினம் — ஸல்லா வஸ்திரம் முதலியன வாங்கிக் கொண்டு போவதும் உண்டு. இவ்விதமான வர்த்தக வரலாறுகளும் இந்தியாவைப் பற்றிய சில விவரங்களும் ஸ்ட்ராபோ—ப்ளினி—டாலெமி முதலியோர் எழுதிய நூல்களில் குறிக்கப்பட்டுள்ளன. எழுதினவர் இன்னார் என்றறியலாகாத பெரிப்ளஸ் என்னும் நூலிலும் இந்த விஷ

யங்கள் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் அக்காலத்தில் கடற்றுறைப் பட்டினங்களாக இருந்து, அப்பால் கடற்கரை வளர்ந்து விட்டமையால் இப்பொழுது உள்நாட்டுப் பட்டினங்கள் ஆயவற்றின் பெயர்களும், அக்காலமுதல் இதுவரையில் துறைமுகங்களாகவே இருப்பனவற்றின் பெயர்களும், அக்காலத்தும் அவ்வப்பெயரான் வழங்கியிருந்தன என்பது அவ்வரலாறுகளால் அறியப்படுகின்றன. சங்கவிலக்கிய வாராய்ச்சியாலும் பிறவாற்றாலும் விளங்குதலான நாகரிக அமிசங்களில் சிலவற்றுக்கு இவ்வரலாறுகள் பக்க பலமான சான்றுகளாகின்றன. இவ்வரலாறுகளை எழுதினவர்களில், ஸ்ட்ராபோ ப்ளினி என்பவர்கள் கிறிஸ்துவ சகாப்தம் முதனூற்றாண்டிலும், டாலெமி என்பவர் இரண்டாவது நூற்றாண்டிலும் இருந்தவர்கள். பதின்மூன்றாவது நூற்றாண்டிலிருந்த மார்கொபோலோ என்பவரும் தமது பிரயாண வரலாற்றில் நமது தேசத்தைப்பற்றிச் சில விஷயங்களைக் குறித்திருக்கின்றனர்.

63. **யவனர் பாஷையிலும் ஹீப்ரு பாஷையிலும் வழங்குதலான சில தமிழ்மொழிகள்.**—தமிழர்களோடு யவனர்களுக்குள்ள வர்த்தக சம்பந்தத்துக்கு அவர்கள் பாஷையும் சான்று பகர்கின்றது. அந்தப் பாஷையில் அரிசி என்பது (Oryza) அரிஜா என்றும், இஞ்சிவேர் என்பது (Zingiber) ஸிஞ்சிபேர் என்றும், கருவா (இலவங்கம்) என்பது (Karpion) கார்பியன் என்றும் வழங்குகின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரமாண்டுகளுக்கு முன்னே ஸாலமன் என்னும் அரசன் காலத்தில் ட்டார்ஷிஷ் மரக்கலங்கள் இந்தியாவினின்றும் பொன்—வெள்ளி—தந்தம்—குரங்கு—மயில் என்பவைகளைக் கொண்டுபோந்தன என ஐரோப்பிய சரிதவாசிரியர்கள் யூகிக்கின்றனர். ஹீப்ரு பைபிலில் குரங்குக்கு **கபீம்** என்றும் மயிலுக்கு

கேம் என்றும் பெயர்கள் வழங்கியிருக்கின்றனவாம். தமிழ்நாட்டில் இக்காலத்தும் குரங்கைக் கவி என்றும் மயிலைத் தோகை என்றும் வழங்குவது நூல் வழக்காக வாயினும் உள்ளபடியே யன்றோ.

64. தமிழகம் & ரோமர்.—ரோமர்களுடைய முற்காலப் பூகோளப் படங்களில் இந்தியாவைக் குறித்த பாகத்தில் தமிழ்ப் பிரதேசம் டமிரிகே என வழங்கப் பெற்றுள்ளது. இது தமிழகம் என்பதன் திரிவேயாம். தமிழகத்து மேற்குத் துறைமுகங்களில் ஒன்றும், அகநானூறு புறநானூறு முதலிய சங்கநூல்களில் குறித்திருப்பதுமான முசிறி என்னும் பட்டினத்தில், ரோமர், தங்கள் வர்த்தகாகளுக்குக் கடற்கொள்ளைக்காரரால் துன்பம் நேராதபடி, எண்ணூற்று நாற்பதின்மர் முதல் ஆயிரத்திருநூற்றுவர் வரையில் அடங்கிய இரண்டு படை வகுப்புக்கள் ஏற்படுத்தி யிருந்தனர். அங்கே அகஸ்டஸ் என்னும் தங்கள் சக்கரவர்த்தியை ஆராதிக்க ஆலயமும் ஒன்று கட்டியிருந்தனர். ஒரு பாண்டியன், அகஸ்டஸ் ஸீஸருக்கு நண்பனும் படைத்துணைவனும் ஆகவிரும்பி, அந்தச் சக்கரவர்த்தியிடம், கிறிஸ்து பிறப்பதற்கு இருபத்தாறாண்டுகளுக்கு முன் ஒரு முறையும், அப்புறம் ஆறாண்டுகள் கழிந்தபிறகு ஒரு முறையும், சில தானாபதிகளைத் தூதாக அனுப்பினானென்று ஸ்ட்ராபோ முதலியோர் எழுதியிருக்கின்றனர். யவனர் என்னப்பட்ட ரோமவீரர் தமிழரசர்களிடம் படைவீரராகவும் அங்கக்காவலராகவும் சேவை செய்தது நமது இலக்கியங்களில் அறியப்படுகின்றது.

VI

65. புதைந்து தூர்ந்து போனவைகளால் அறியப்படுவன.—தமிழ் நாட்டிற் பல விடங்களில் புதையுண்டு கிடந்து நெடுங்காலமாய் அங்கங்கே காணப்படுவனவான ரோம

நாணயங்கள், ரோம சக்கரவர்த்திகளில் அகஸ்டஸ் முதல் ஜீனோ என்பவர் வரையில், அதாவது கி. மு. இருபத்தேழாமாண்டு முதல் கி. பி. நானூற்றுத் தொண்ணூறு மாண்டுவரையில் வழங்கியவை என்று அறியப்படுகின்றன. இதனால் ரோமதேசம் உச்சநிலை உற்றிருந்த காலமே தமிழகம் உச்சநிலை பெற்றிருந்த காலமும் என்பது துணியப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும், தமிழ்வரம் பறுத்த தண்புனனாடு" என்பதில் 'தொடியோள் பௌவம்' என்பதை விளக்குமிடத்தில், அடியார்க்கு நல்லார், "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடு கொடுங்கடல் கொள்ள" என்னும் சிலப்பதிகார வடிகளை உதகரித்து, 'தலைச்சங்கமிருந்த காலத்தில் பாண்டிநாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னு மாற்றிற்கும் குமரியென்னு மாற்றுக்கு மிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ் தெங்கநாடும் ஏழ் மதுரைநாடும் ஏழ் முன்பாலைநாடும் ஏழ் பின்பாலைநாடும் ஏழ் குன்றநாடும் ஏழ் குணகாரைநாடும் ஏழ் குறும்பனைநாடும் என்னு மிந்த நாற்பத்தொன்பதுநாடும் குமரி கொல்ல முதலிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலால் குமரியாகிய பௌவமென்றார் என்றுணர்க' என விளக்கியிருக்கின்றனர். இது அக்காலத்தில் தமிழகத்தின் விரிவும் பரப்பும் மிகப்பெரிது என்பது முதலிய சில விஷயங்களை யூகிப்பதற் கிடந்தருகின்றது. சென்னையிலுள்ள விநோதப் பொருட்காட்சி சாலையில், முன்னாளில் வழங்கிப் புதையுண்ட மட்பாத்திரங்களும் ஆபரணங்களும் பிறவும் காணப்படுகின்றன. நாளேற நாளேற இன்னோரன்னவை அங்கங்கே காணப்படுவனவாய்ப் பல

புராதன அதிசயங்களை விளக்கிவருகின்றன. இவைகளை யெல்லாம் துரைத்தனத்தார் அப்போதைக்கப் போது அச்சிட்டு வருகின்றனர். காலங்கண்ட பழைய ஆலய கோபுரங்களும் பாழடைந்துவிட்ட பழைய கட்டடங்களும் புராதனமான சில சிலாவிக்கிரகங்களும் தமிழர்களுடைய புராதனமான சிற்ப விற்பனத்துக்குச் சான்று பகர்கின்றன.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1929. B 3262.